வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria ரியா பணப்பரிமாற்றும்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 03 17.01.2022 திங்கட்கிழமை இதழ் : 43 பக்கங்கள் : 16

# இந்திய ஆசியுடன் இன நல்லிணக்கம்

## கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி நாளை அறிவிப்பார்?

கொழும்பு, ஜனவரி 17

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை பாராளுமன்றில் புதிய ஆண்டுக்கான கொள்கை விளக்க உரையை ஆற்றவுள்ளார். இந்த உரையில், இந்தியாவின் ஆசியுடன் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயல்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான உறுதிமொழியும் இடம் பெறும் என்று கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.** 15

## சுதந்திரக் கட்சி வெளியேறும் முன்னர் வெளியேற்றுங்கள்!

### இராஜாங்க அமைச்சர் திலும்



கொழும்பு, ஜன. 17

“சிறீலங்கா சுதந்திர கட்சியை ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைக்கும் ஒப்பந்தத்தை சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது செயல்படுத்துகிறார். அப்பம் சாப்பிட்ட கதையின் இரண்டாம் பாகத்தை அரங்கேற்ற முன் சுதந்திரக் கட்சியை 15

## நாமல் எப்படி ஜனாதிபதி ஆவாரென்று பார்க்கலாம்!

### சிறீலங்கா சுதந்திரக் கட்சி சவால்



கொழும்பு, ஜன. 17

“சுதந்திர கட்சியின் ஆதரவு இல்லாமல் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எதிர் காலத்தில் எவ்வாறு ஜனாதிபதி அல்லது பிரதமராவார் என்பதை பார்த்துக் கொள்கிறோம்”, என்று சிறீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அத்துடன், சிறீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமா, வெளியேறாதா என்பதுதான் தற்போதைய அரசியல் களத்தின் பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. அரசாங்கத்தில் கூட்டணி அமைத்துள்ள சுதந்திர 15

## கூட்டமைப்புடன் பேசுவதற்கு தயாராகின்றார் ஜனாதிபதி!

### இறுதி வாரத்தில் சந்திப்பு நிகழும்

கொழும்பு, ஜன. 17

அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் நாடு பல்வேறு நெருக்கு வாரங்களைச் சந்தித்துள்ள தற்போதைய நிலைமையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் விரைவில் முக்கிய சந்திப்பு நடைபெறவுள்ளது என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச 15

## இலங்கைக்கு அவசர உதவி; பேச்சுகள் இறுதியாகின!

### இந்திய தூதரகம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 17

இலங்கைக்கு அவசர பொருளாதார உதவி வழங்குவது குறித்த பேச்சுக்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன என்று இலங்கைக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

“கலாநிதி எஸ். ஜெய்சங்கர் மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் இலங்கைக்கான இந்தியா 15

## பொலிஸார் தாக்குதல் இரு நபர்கள் படுகாயம்!

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

பருத்தித்துறை, ஜன.17

வல்வெட்டித்துறை பொலிஸார் இரு நபர்களை கண்முடித்தனமாக தாக்கியதில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். காயமடைந்தவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச் 15

## கொரோனாவுக்கு 14 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 17

கோவிட் -19 தொற்று தொடர்பாக நாட்டில் நேற்றுமுன்தினம் மேலும் 14 உயிரிழப்புகள் இடம் பெற்றுள்ளன.

4 ஆண்களும், 10 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் மொத்த எண் 15

## சுதந்திரக் கட்சியுடன் 16 பேர் அரசை விட்டு வெளியேறுவர்!

### மூன்றிலிரண்டு பெரும்பான்மை இழக்கும் அரசு?



கொழும்பு, ஜன. 17

சுதந்திரக் கட்சியுடன் மேலும் இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து 16 பேராக வெளியேறவுள்ளனர் என்று சுதந்திர கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர் சிரேஷ்ட உப தலைவருமான பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாம் கூட்டத்தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட 15

## மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் நிலம் பெரும்பான்மையினர் மீள ஆக்கிரமிப்பு!



மட்டக்களப்பு, ஜன. 17

தமிழ் மக்களின் பூர்வீக நிலப்பபரப்பான மட்டக்களப்பு - மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரையை சிங்களப் பெரும்பான்மை மக்கள் மீளவும் ஆக்கிரமித்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் 15

## சந்திரிகாவை மையமாக வைத்து உருவாகின்றது புதிய கூட்டணி!

### குமாரவெல்கம, அர்ஜூன, அநுர, சுசில் கைகோப்பு

கொழும்பு, ஜன. 17

தென்னிலங்கை அரசியல் களத்தில் புதிய அரசியல் அணியொன்று எதிர்வரும் மார்ச்சில் ஐந்தாம் திகதியளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த அரசியல் அணியில் மையப்புள்ளியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநயக்க குமாரதுங்க இருப்பார்.

அத்துடன், குமாரவெல்கம, அர்ஜூன ரணதுங்க, சுசில் பிரேமஜயந்த, அநுர பிரியதர்சன யாப்பா ஆகியோரும் இதில் இணையவுள்ளனர்.

இந்த அணி குமார வெல்கம தலைமையில் 15

## மார்ச்சில் பெரும் நெருக்கடி



கொழும்பு, ஜன. 17

மார்ச் மாதத்தில் இலங்கை ஐந்து பெரும் நெருக்கடிகளை சந்திக்கும் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அந்தக் காலத்தில் பெரிய அளவில் தோட்டங்கள் செய்யும் விவசாயிகள் தங்கள் தங்களுக்கென்று மாட்டு வண்டில்களை வைத்திருப்பார்கள்.

அந்த மாடுகளை தோட்டங்களை உழுவதற்கும் பயன்படுத்துவார்கள். தோட்டத்திற்கு தேவையான உரம், தண்ணீர் இறைக்கும் யந்திரம் போன்ற பொருட்களை வீடுகளிலிருந்து தோட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் இந்த வண்டில்கள்தான் பிரதான சாதனமாக இருந்தன.

இதனால், மாட்டுவண்டில்கள் தினமும் வீட்டுக்கும் தோட்டத்திற்கும் சென்று வரும். மாட்டு வண்டில்களில் அந்த மாடுகளுக்கு தோட்டத்திற்கு போவதற்கு வழி காட்ட வேண்டியதில்லை. தானாக நேரே தோட்டங்களுக்கு சென்று விடும். இது, தொடர்ச்சியாக செய்வதால் வந்த பழக்கம்.

அதுபோலத்தானோ என்னவோ நமது பத்திரிகையாளர்களுக்கும் (இந்த ஊர்க்குருவிக்கும்தான்) சில விடயங்கள் பழகிப்போய்விட்டனவோ தெரியவில்லை.

யுத்த காலத்தில், படையினர் ஒரு தாக்குதல் நடத்தி - அதில் பொதுமக்கள் கொல்லப்பட்டால், படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இத்தனைபேர் பலி என்று உடனே அறிக்கையிட்டுவிடுவார்கள்.

ஆனால், அதுவே ஓர் இயக்கம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் யாராவது ஒரு பொதுமகன் கொல்லப்பட்டால், இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டில் இன்னார் பலியானார் என்றுதான் அறிக்கையிடுவார்கள், அது எந்த இயக்கம் என்று தெரிந்திருந்தாலும். (அரசாங்க படைகளோடு சேர்ந்து இயங்கிய இயக்கங்கள் என்றால் அது விதிவிலக்கு.)

படையினரின் அல்லது அரசோடு சேர்ந்து இயங்கிய குழுக்களால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை ஆண்டு தோறும் நம்மவர்கள் நினைவுகூரும்போது, மற்றைய இயக்கங்களால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை யாரும் கண்டுகொள்வதில்லை.

சில நாட்களுக்கு முன்னனர் இந்தப் பத்தியில், யாழ்ப்பாண நாகவிகாரை தற்போது இருக்கும் காணி, வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்கு சொந்தமானது என்ற தகவலை சீ. வீ. கே சிவஞானம் ஐயா தெரிவித்திருந்தது பற்றியும் அதற்கு சட்டத்தரணி சிவகணேசன் அவர்கள் லண்டனிலிருந்து தெரிவித்த தகவலையும் தந்திருந்தேன்.

கூடவே, நமது வரலாறுகள் சரியாக எதிர்காலச் சந்ததியினருக்கு கொண்டுசெல்லப்படவேண்டும் என்ற இந்த ஊர்க்குருவியின் ஆதங்கத்தையும் குறிப்பிட்டிருந்தேன்.

இதனைப் படித்துவிட்டு, லண்டனில் வாழும் 'மணிக்குரல்' எஸ். கே. ராஜன் ஒரு குறுந்தகவல் அனுப்பினார். (மணிக்குரல் என்று நான் குறிப்பிடுவது, யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் ஒலித்த அந்த 'மணிக்குரல்' விளம்பரசேவையில் அவர் பணியாற்றியதை 'ஈழநாடு' வாசகர்கள் அறிவார்கள் என்பதால்). அவர் இப்போது லண்டனில் பிரபல அறிவிப்பாளர்.

சில தினங்களுக்கு முன்னர், தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் நினைவு அனுஷ்டிக்கப்பட்ட போது அதனை செய்தியாக்கிய யாழ்ப்பாண பத்திரிகை ஒன்று, உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் விருந்துபசாரத்தின்போது வன்முறைக்கும்பலால் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் நினைவு' என்று செய்தியாக்கியிருந்தது.

அதனை குறிப்பிட்டு எழுதிய ராஜன்,

வீரசிங்கம் மண்டபத்தின் முன்பக்கத்தில் நடந்தது கூட்டம்.

அங்கே திருச்சி பேராசிரியர் நைனா முகமது பேசிக்கொண்டிருந்தபொழுது, ஜனார்த்தனன் மேடைக்குக் கொண்டுவரப்பட்டார்.

அப்பொழுது பொலிஸ் வாகனங்கள் (ஜீப்-ட்றக்) அங்கு வந்ததன.

வீதியைத்தடை செய்திருந்த மக்களை நகருமாறு பொலிஸார் ஒலி பெருக்கியில் அறிவித்தனர்.

மக்கள் நகரவில்லை. ஆத்திரம் கொண்ட பொலிஸார் திரும்பிச்சென்றனர்.

மீண்டும் கலவரமடக்கும் பொலிஸார் அவ்விடத்துக்கு நுழைந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். வானத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அப்போது அந்தக்குண்டுபட்டு, அறுந்து விழுந்த மின்சாரக்கம்பியினால்தான் 9பேர் அவ்விடத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்கள்.

அந்த உயிரிழப்புக்கு காரணம் பொலிஸாரே. வன்முறைக் கும்பல் அல்ல.

இந்தத் தகவல்களை எழுதிய ராஜன், அடுத்த ஆண்டாவது சரியாக எழுதவேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்திருந்தார்.

முகநூலில் எழுதுபவர்கள்தான் தாம் என்ன எழுதினாலும் முகநூல் அப்படியே பிரசுரிக்கும் என்பதால் எழுதுகிறார்கள். பத்திரிகைகள் அப்படியல்ல. அவற்றுக்கு வரலாற்றை திரிபு படுத்தாமல் கொடுக்கவேண்டும் என்ற அக்கறை இருக்கவேண்டும் என்ற அவரின் ஆதங்கமும் நியாயமானதே!

**- ஊர்க்குருவி**

# பேராயரை கடுமையாக விமர்சித்தார் ஞானசாரர்!

கொழும்பு, ஜன. 17

நாட்டின் பொலிஸ் மா அதிபர் பதவியை, கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் வழங்க வேண்டுமென ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் பிரதானி கலகொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,



கர்தினாலின் சில செயல்பாடுகளை பார்க்கும் போது அவர் அதிகாரபூர்வமற்ற பொலிஸ்மா அதிபராக செயல்படுவதாகவே தென்படுகிறது.

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு வைக்கப்பட்ட சம்பவம் ஓர் சாதாரண விடயம் அல்ல, இந்த நாட்டில் விசாரணை நடத்தப்படும் முறையொன்று உள்ளது.

கர்தினால் தனது சமூகத்தின் சார்பில் குரல் கொடுக்க வேண்டும் என்பதில் பிரச்னையில்லை. கர்தினால் பொலிஸ் மா அதிபரை விமர்சனம் செய்திருந்தார்.

அவ்வாறானால் பொலிஸ் மா அதிபர் பதவியை ஜனாதிபதி கர்தினாலிடம் வழங்குவதே பொருத்தமானது-என்றார். (அ)

# உருத்திரபுரீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் தொன்மையை காக்க வருமாறு அழைப்பு!

கிளிநொச்சி, ஜன. 17

நவஈச்சரங்களில் ஒன்றான கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தில் பங்கேற்று ஆலயத்தின் வரலாற்று தொன்மையை பாதுகாக்க அடியவர்கள் முன்வர வேண்டும் என்று கும்பாபிஷேக நெறியாளர் சிவசிறீ அமிர்த சிறி காந்த குருக்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலய மகா பெரும் சாந்தி வைபவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. இந்த நிலையிலேயே அவர் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இங்கே நடைபெறுகின்ற மகா கும்பாபிஷேகம் 17 குண்டங்களை பிரதான யாகசாலையாக அமையப்பெற்று இங்கே ஆலயத்தில் இடம்பெறுவதற்கு எல்லாம்வல்ல உருத்திரபுரீஸ்வரருடைய திருவருள் கைகூடியிருக்கின்றது.

இந்த மகா கும்பாபிஷேக கருமாரம்பம் என்ற கிரியை ஆரம்பிக்கும் நாளாக நாளை (இன்று) திங்கட்கிழமை காலை கோதலி முகூர்த்தம் உள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி எண்ணெய் காப்பு சாற்றப்படும் அன்று அதிகாலை 5 மணியிலிருந்து மாலை 6 மணிவரை அடியவர்கள் சுகாதார விதிகளை பின்பற்றி எண்ணெய்ககாப்பு சாற்ற முடியும். 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.32 மணிமுதல் 11.22 மணி வரை இடம்பெறும் - என்றார். (ஐ)

## மின் துடிப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் இன்று

கொழும்பு, ஜன. 17

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின்சார துண்டிப்பு தொடர்பில் தீர்மானமிக்க கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை மின்சார சபை மற்றும் கனியவள கூட்டுதாபனத்தின் அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளதாக, கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

மின்சார விநியோகத்திற்கு அவசியமான எரிபொருள் விநியோகம் தொடர்பில் இதன்போது இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## சாதனையாளர் கௌரவிப்பு

பட்டிப்பளை, ஜன. 17

மட்டக்களப்பு மண்முனை தென் மேற்கு, பிரிவுக்குட்பட்ட அம்பிலாந்துறை திசைகாட்டி மையம் நடத்திய பொங்கல் விழாவும் சாதனையாளர் கௌரவிப்பும் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது அம்பிலாந்துறையிலிருந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பிரதம அதிதிகளும் கௌரவிக்கப்பட்டனர்.

# எந்தவொரு கட்சியுடனும் கூட்டணிக்கு தயாரில்லை!

## தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 17

"அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கை முற்றாகத் தகர்க்கப்பட்டதால் கட்சிகளிலிருந்து வெளியேறும் ஆதரவாளர்கள் தேசிய மக்கள் சக்தியில் வந்து இணைகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் தேசிய மக்கள் சக்தி வேறு எந்தக் கட்சியுடன் கூட்டணியை வைத்துக்கொள்வதில்லை என்பதில் உறுதியாக உள்ளது."

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) நிர்வாகக் குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சி வேறு எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைத்துக்கொள்ள போவதில்லை என்ற தீர்மானத்தில் உறுதியாக உள்ளது.

மற்றக் கட்சிகளில் முற்போக்குவாதிகள் யாரேனும் இருப்பார்களாயின் எம்முடன் வந்து இணையலாம். எனினும், கட்சியில் இணைந்துகொள்பவர்கள் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து பார்த்ததன் பின்னரே அவர்களை இணைத்துக் கொள்வோம்.

அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கை முற்றாகத் தகர்க்கப்பட்டதால்தான் மக்கள் தற்போது தேசிய மக்கள் சக்தியை நம்பி அந்தக் கட்சியில் இணையத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் தேசிய மக்கள் சக்தி ஏனைய கட்சிகளுடன் கூட்டணி சேருமாயின் எமது கட்சியில் வந்து இணைந்த மக்கள் மீண்டும் விலகி செல்வார்.

விலகிச் செல்பவர்களுக்கு மீண்டும் இணைவதற்கு ஒரு கட்சி இல்லை. மக்கள் இருக்கும் கட்சிகளிலிருந்து விலகி வருவார்களாயின் அவ்வாறான கட்சிகளுடன் நாம் எவ்வாறு கூட்டணி அமைக்க முடியும்?

எனவே, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, அரசு என எந்தக் கட்சியிலும் நாம் கூட்டணி அமைக்கப்போவதில்லை.

எனினும், இந்தக் கட்சிகளில் முற்போக்குவாதிகள் யாரேனும் இருப்பார்களாயின் அவர்கள் எம்முடன் வந்து இணைந்து கொள்ளலாம்-என்றார்.

ஈழநாடு
Eelanadu
17.01.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், தை 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

## இந்தியா நம்பகமாக - ஆனால் - கொழும்பு?

இலங்கைக்கு நம்பகமானதும் உறுதியானதுமான நாடாக இந்தியா இருக்குமென்று - இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார். இலங்கையின் நிதிமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடனான சந்திப்பைத் தொடர்ந்து, அவர் மேற்கண்டவாறு தனது ருவிட்டரில் பதிவிட்டிருக்கின்றார். இன்று மட்டுமல்ல - நவீன அரசியல் வரலாற்றில், இந்தியா எப்போதும் இலங்கைக்கு நம்பகமாகவே இருந்திருக்கின்றது. இலங்கைக்கு ஒரு நெருக்கடி என்னும்போது ஓடிவரும் அயல்நாடாகவும், இந்தியா மட்டுமே இருந்திருக்கின்றது. இந்தியா மூலம் இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் பெரும் நன்மைகளை பெற்றிருக்கின்றனர். 1971இல், ஜே.வி.பி கிளர்ச்சியாளர்கள் தென்னிலங்கையை கைப்பற்றிவிடலாம் என்னும் சூழலில், அன்றைய ஆட்சியாளர் சிறீமாவோ பண்டாரநாயக்கா, இந்தியாவின் இராணுவ உதவியை நாடினார். உடனடியாகவே இந்தியா உதவியது.

ஆனால், அதற்கு கைமாறாக இலங்கை என்ன செய்தது? ஆறு மாதங்களின் பின்னர் கிழக்கு பாகிஸ்தான் விவகாரத்தின்போது, பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு இந்தியா தடை விதித்திருந்தது. ஆனால், இலங்கையோ, கிழக்கு பாகிஸ்தான் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் கருத்தில் கொள்ளாமல், பாகிஸ்தானிய விமானம், பெற்றோல் நிரப்புவதற்காக, கொழும்பு விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு அனுமதி வழங்கியது. ஒரு நட்பு நாட்டுக்கு நாங்கள் உதவினோம் என்று கொழும்பு பதிலளித்தது. இந்த இடத்தில் இலங்கையின் நம்பகத்தன்மை எங்கு போனது? ஆனாலும் இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு நம்பகமாகவே இருக்கின்றது.

இன்று வரையில் - இலங்கையை ஒரு நட்பு நாடாகவே இந்தியா கையாண்டு வருகின்றது - ஆனால், இதற்கு பதிலாக இலங்கை என்ன செய்கின்றது? நடுநிலை வெளிவிவகாரக் கொள்கை என்னும் அடிப்படையில், இந்தியாவின் பரம எதிரி நாடான பாகிஸ்தானுடன் நெருங்கிய நட்பைப் பேணி வருகின்றது. இப்போது பிறிதாரு எதிரி நாடான சீனாவுடன் நெருங்கிச் செயல்படுகின்றது. உடன்பாடு காணப்பட்ட, கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான ஒப்பந்தத்தை இரத்துச் செய்தது. ஆனாலும் இந்தியா அமைதியாக இருந்தது. பின்னர் மேற்கு கொள்கலன் முனையத்தை வழங்கி சமாளித்தது. ஆனால், உரக் கொள்வனவு விடயத்தில் முரண்பாடுகள் ஏற்பட்டபோது, சீனா, அதன் மேலாதிக்க முகத்தை காண்பித்தது. நட்பு முகத்தைக் காண்பிக்கவில்லை. ஒரு வேளை இந்தியாவை இலகுவாக கையாளலாமென்று கொழும்பு கருதுகின்றதோ! கொழும்பு சீனாவை காண்பித்து, புதுடில்லியை பணிய வைப்பதாக சில அபிப்பிராயங்கள் உண்டு. ஆனால், நாம் அவ்வாறு கருதவில்லை. ஒரு நாட்டை காண்பித்து, இந்தியாவை கையாளுவதற்கு இந்தியா ஒன்றும் மாலைதீவோ, பூட்டானோ அல்ல.

ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியா ஒரு நிர்ணயகரமான சக்தி என்பதில் தமிழ் மக்கள் உறுதியுடன் இருக்கின்றனர். ஆனால், ஆகக் குறைந்தது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான, 13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட, இன்றுவரையில் சிங்கள ஆட்சியாளர்கள் முழுமையாக அமுல்படுத்தவில்லை - அதற்காக முயற்சிக்கவுமில்லை. இப்போது இதனை, தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து வலியுறுத்தியிருக்கின்றன. இதனையே, இந்தியா நீண்டகாலமாக வலியுறுத்திவந்தது. இந்திய படைகளோடு மோதியமை - அதன் பின்னர் இடம்பெற்ற ராஜீவ் கொலை என்பன பாரதூரமான தமிழர் தவறுகள்தான். அதில் இரு வேறு அபிப்பிராயங்கள் இருக்க முடியாது.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், புலிகள் இருக்கின்ற காலத்திலேயே, அதனை ஒப்புக் கொண்டிருக்கின்றார். மன்னிப்பும் கோரியிருக்கின்றார். ஒரு விடயத்திற்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டால், அங்கு தவறுகள் ஒப்புக்கொள்ளப்படுகின்றன என்பதே, அதன் பொருளாகும். தவறுகள் நடந்துவிட்டன என்பதை இப்போது யாரும் மறுப்பதில்லை. ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் இந்தியாவை நோக்கியே நட்புக் கரம் நீட்டியிருக்கின்றனர். இந்தியாவின் எதிரி நாடுகளை நோக்கி ஈழத் தமிழர்கள் நேசக் கரம் நீட்டவில்லை. நீங்கள் எங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்கூட - நாங்கள் உங்களின் நண்பர்களாவோம் - என்பதையே, ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் உரத்துக் கூறிவருகின்றனர். சிங்கள தரப்புக்கள் போல், ஈழத் தமிழர்கள் உதட்டளவில் பேசவில்லை. எனவே, உதட்டளவில் இந்தியாவை வரவேற்கும் கொழும்புக்கு நம்பகமாக இருப்பது போல் - உண்மையிலேயே இந்தியாவை நோக்கி - வழிமேல் விழிவைத்திருக்கும் ஈழத் தமிழர்களும், இந்தியாவின் உறுதியான ஆதரவுக்காகவும் காத்திருக்கின்றனர்.

# ‘காட்டாட்சி’: எச்சரிக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கையில் மிக மோசமான நிலையை எட்டியுள்ள பொருளாதார நிலவரம் சட்டவாட்சி குலைந்து ஒரு காட்டாட்சிக்கு வழிவகுக்கும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (Bar Association of Sri Lanka) எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு முகங்கொடுத்த வேளையிலும் இன்றிருப்பது போன்ற மோசமான பொருளாதார நிலைமைக்கு நாடு முகங்கொடுத்திருக்கவில்லை என்று இறுதிக் கட்ட வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு தலைமை தாங்கிய முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

தற்போது சட்டம் - ஒழுங்கு போன்ற விடயங்களோடு அன்றாடம் ஈடுபடுகின்ற இலங்கை சட்டத்தரணிகளே தமது சங்கத்தினூடக இன்றைய அரசாங்கம் தற்போதைய பொருளாதார நிலவரத்துக்கு முகங்கொடுக்க முடியாது திண்டாடுவது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒரு நாட்டில் சட்டவாட்சி நிலை தளரும் போது அனைத்து வடிவிலுமான சமூக விரோத செயல்களும் தலைகாட்ட ஆரம்பித்து விடும். அச்சமயம் குற்றச்செயல்களும் அதிகரித்து மக்கள் தம் மனம்போன போக்கில் சட்டத்தை கையிலெடுக்கவும் முன்வருவர். இதன்காரணமாக பொருளாதார நெருக்கடியோடு சமூகப் பிரச்னைகளும் பின்னிப்பிணைந்ததாகவே தலைகாட்ட ஆரம்பிக்கும்.

ஏற்கனவே, இன்றைய அரசாங்கத்துக்கு தோள் கொடுத்து நின்ற பங்காளிக் கட்சிகளும் தற்போது ஆட்சிப் பீடத்திலுள்ளவர்களின் தவறான பொருளாதார அணுகுமுறைகள் குறித்து விமர்சித்து வருகின்றன. இதனால் ஆளும் தரப்புக்குள்ளேயே ஒருவரை ஒருவர் சாடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய நாட்டு நிலவரத்தை எச்சரிக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையானது, கச்சிதமான புள்ளி விபரங்களோடு வெளியிடப்பட்டுள்ளது. இப்புள்ளி விபரங்கள் இன்றைய அரசு பதவிக்கு வந்த காலம் முதல் எவ்வாறு இலங்கையின் பொருளாதாரம் நிலைதளர ஆரம்பித்தது என்பதனையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

வெறுமனே எச்சரிப்பதோடு மட்டும் நின்றுவிடாது உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ தகுந்த பொருளாதார நிபுணத்துவம் வாய்ந்தோரது ஆலோசனைகளையும் பெற முன்வருமாறு அரச தரப்பினருக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவுரை வழங்கியுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் கவனத்தில் கொள்ள வேண்டியதாக இருப்பது, நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்போர் மேலும் வறுமைக்கோட்டிற்கு கீழே தள்ளப்படுகின்றனர் என்ற விடயமாகும். அத்துடன், நடுத்தர வருமானமுள்ள குடும்பங்கள் அதாவது அன்றாடம் தொழில் பார்க்கின்ற சட்டத்தரணிகள் கூட தமது வருமானங்களுக்காக சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளனர் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இலங்கையின் உள்நாட்டு உற்பத்திகள் மூலமான வருவாய் குறைவடைந்த நிலையில் வெளிநாட்டுக் கடன்களிலேயே நாட்டின் பொருளாரதரம் வெகுவாக தங்கியுள்ளது. இத்தகைய அசாதாரண நிலைமையை சீர் செய்ய இலங்கையிடம் தகுந்த நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இல்லாதிருப்பது ஒருபுறமிருக்க நிதியுதவிகளுக்கு மாத்திரமல்ல. நிபுணத்துவ ஆலோசனைகளுக்கும் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியைப்பெற வேண்டிய நிலைக்கு இலங்கை அரசு உள்ளாகியுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒருபுறமிருக்க, மருத்தவ துறையிலும் பலத்த தாக்கங்கள் ஏற்படக்கூடிய குறிப்பாக அத்தியாவசிய மருந்துப்பொருட்கள் மற்றும் அன்றாடத் தேவைக்கான மருந்து வகைகள் உபகரணங்கள் என்பவற்றை இறக்குமதி செய்யவும் கொள்வனவு செய்யவும் அரசு பாரிய சிரமங்களை எதிர்நோக்க்கூடிய சூழல் விரைந்து உருவாகி வருவதை மருத்துவ வட்டாரங்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த நிலையில் இலங்கையின் எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ அண்மையில் தமது யாழ்ப்பாண விஜயத்தின்போது இலங்கை ஒரு “தோல்வியடைந்த நாடாக மாறியுள்ளது“ என்று கூறியிருந்தார். இதனை உறுதிப்படுத்துவதாகவே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கை விளங்குகின்றது.

எனவே உலகில் எந்தவொரு நாடும் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தோல்வியடையும் போது சட்டம் - ஒழுங்கு நிலைதளர்ந்து ஒரு அநாகரிகமான “காட்டாட்சி“ ஏற்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். இது குறித்த எச்சரிக்கையை விடுத்து நாட்டு மக்களை விழிப்படைய வைப்பதாகவே இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கை காணப்படுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 17 திங்கட்கிழமை
பிலவ வருடம் - தை 4
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : பவுர்ணமி




**மேடம்**
குடும்பத்தினர் உங்கள் மீது அதிகமாக அன்பு, பாசம் காட்டுவர். தொழில் வளர்ச்சி கூடும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தினர் இடையே அன்பும், அரவணைப்பும் அதிகரிக்கும்.

**இடபம்**
செய்ய நினைத்ததை குறித்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நீங்கள் தீட்டிய திட்டங்கள் நிறைவு பெறும். வாழ்வு சிறக்கும். பல நாளாக செய்ய நினைத்த ஒரு செயலை முடிப்பீர்கள்.

**மிதுனம்**
நேர்மறை சிந்தனைகள் காரணமாக மனம் தெளிவாகும். பகை மறந்து செயல்படுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். மற்றவர்களை வென்று முன்னேறும் துணிச்சல் வரும்.

**கடகம்**
விரயங்கள் கூடும். விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. எதையும் ஒன்றுக்கு இரண்டு முறை செய்த பிறகே சரியாக வரும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்பட்டால் அமைதி உண்டு.

**சிம்மம்**
தடைப்பட்டு வந்த விஷயம் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். சுபச்செலவுகள் உண்டு. குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பயன்மிக்க புதுப் பொருள் ஒன்றை வாங்கி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கன்னி**
மறதி காரணமாக சிறு சிறு தொல்லைகளை சந்திப்பீர்கள். முன்னேற்றத்துக்கான முயற்சி சற்றே தாமதமாகப் பலன் தரும். மன உறுதியால் நினைத்த விஷயத்தை செய்து முடிப்பீர்கள்.

**துலாம்**
சாதுர்யமாக செயல்பட்டு அக்கம்பக்கத்தினரிடம் பாராட்டு பெறுவீர்கள். பெரியவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி அன்பை பெறுவீர்கள்.பணியிடத்தில் இருந்த தொல்லை தீரும். சுபச்செலவு உண்டு.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களை விட மனதில் தெளிவு கூடும். எதையும் நன்கு யோசித்த பிறகு செய்வது நல்லது. கவனமாக எதையும் செய்வோருக்கு நன்மை உண்டு.

**தனுசு**
மற்றவர் மனதை புரிந்து கொண்டு செயல்படுவது நல்லது. நீங்கள் நடந்து கொள்வதைப் பொருத்து தாயின் ஆதரவு இருக்கும். உங்களின் நிதானப் போக்கால் வேலைப்பளு அதிகரிக்கும்.

**மகரம்**
உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த பிரச்னை தீரும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். ஆரோக்கியம் சிறக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். உடன்பிறந்தோர் உறுதுணையாக இருப்பர்.

**கும்பம்**
குழந்தைகளுக்கு உங்கள் மீது பாசமும், நேசமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய கனவுகளை இன்று நனவாக்கிக் கொள்வீர்கள். நண்பர்களுக்கு உதவி செய்து அவர்களை நெகிழ வைப்பீர்கள்.

**மீனம்**
புதிய வாகனம் வாங்கும் முயற்சி இன்று நிறைவேறும். மேலதிகாரிகள் உங்கள் திறமைக்குத் தக்க உயர்வு தருவர். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சி வெற்றி தரும்.

# தமிழகத்தில் நேற்று முழுநாள் ஊரடங்கு: சென்னை மாநகர் முற்றாக ஸ்தம்பிதம்!

சென்னை, ஜன. 17

தமிழகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது, இதனால். அத்தியவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்தும் முழுமையாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

தமிழகத்தில் கொரோனா பரவல் வேகத்துக்கு முட்டுக்கட்டை போடும் வகையிலும், 'ஒமைக்ரோன்' சமூக பரவல் ஆகிவிடக்கூடாது என்பதற்காகவும் தமிழக அரசின் ஊரடங்கு கட்டுப்பாடுகள் அமலில் இருக்கிறது. அதன்படி தமிழகத்தில் கடந்த 6 ஆம் திகதி முதல் இரவு ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டது. இந்த



மாதம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு கடைபிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி நேற்றும் தமிழகத்தில் முழு ஊரடங்கு அமுலுக்கு வந்தது. முழு ஊரடங்கு காரணமாக காய்கறி, மளிகை, இறைச்சி கடைகள், வணிக நிறுவனங்கள், திரையரங்குகள் திறக்கப்படவில்லை. பொதுப் போக்குவரத்தும் செயற்படவில்லை. மின்சார ரெயில் மட்டும் குறைந்த எண்ணிக்கையில் இயங்கின. ரயில், விமான பயணிகள் சொந்த மற்றும் வாடகை வாகனங்களில் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

முழு ஊரடங்கையொட்டி தமிழகம் முழுவதும் 60 ஆயிரம் பொலிஸார் கண்காணிப்பு பணியில் ஈடுபடனர். சென்னையில் மட்டும் 10 ஆயிரம் பொலிஸார் ஈடுபட்டனர்

# தமிழகத்தில் எம்.ஜி.ஆரின் பொற்கால ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவோம்

## பன்னீர், எடப்பாடி கூட்டாக அறிக்கை


சென்னை, ஜன. 17

எம்.ஜி.ஆரின் 105ஆவது பிறந்தநாள் இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படும் நிலையில், 'தமிழகத்தில் எம்.ஜி.ஆரின் பொற்கால ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவோம்' என அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

எம்.ஜி.ஆரும், அண்ணாவும் தமிழ் இன எழுச்சியில் அக்கறை கொண்ட சான்றோரும் உருவாக்கிய இயக்கத்தை அழிக்க, ஊழலும், சுயநலமும், தீய சக்திகளும் அண்ணாவின் ஆட்சியை தங்கள் கோரப்பிடிக்குள் வைத்து நடத்திய அராஜகத்தை எதிர்த்து துணிவுடன் போராடியவர் எம்.ஜி.ஆர். நம் உயிரினும் மேலான அ.தி.மு.க.வை தோற்றுவித்து, வளர்த்து ஆட்சியையும், அதிகாரத்தையும் சாமானிய மக்களின் கைகளுக்கு கொண்டுசென்ற ஏழைகளின் தோழன்.

பத்து ஆண்டுகள் ஆட்சி செய்தாலும், பலநூறு ஆண்டுகள் நிலைத்து நிற்கும் எடுத்துக்காட்டான திட்டங்களை நிறைவேற்றி கருணை தீபமாய் ஒளிரும் ஆட்சி முறையை தமிழ்நாட்டுக்கு வழங்கியவர் நம் வள்ளல் எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆரின் தலைமை சீடராக, அவரையே தனது மாதா, பிதா, குரு தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த ஜெயலலிதாவிடம் 30 ஆண்டுகள் பயிற்சி பெற்ற நாம் எம்.ஜி.ஆர். வகுத்துத்தந்த பாதையில், ஜெயலலிதாவின் வீரம்-விவேகத்துடன் செயல்பட வேண்டிய காலம் இது.



மனசாட்சியை அடகு வைத்துவிட்டு, மனம்போனபடி பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி, கார்ப்பரேட் விளம்பர தேர்தல் பிரசாரம் செய்து, உள்ளத்தில் பொய்யும், உதட்டில் புன்னகையுமாய் மக்களிடம் உறவாடி ஒரு சில லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்திருக்கும் தி.மு.க. அரசின் திறமையற்ற, ஊழல் மிகுந்த, மக்களை வஞ்சிக்கின்ற, சுயநலம் மிக்க ஒரு குடும்ப ஆட்சியின் அலங்கோலங்களை தமிழ்நாட்டில் அடியோடு வேரறுக்க நாம் அனைவரும் போர் பரணி பாடவேண்டிய நேரம் இது.

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காளிமாதா ஜோதிட நிலையம்**



இந்திய பிரபல்யமான பாரம்பரிய

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**

ஜாதம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை
அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)
075 217 1943

# அரசாங்கத்தை விட்டு வெளியேறி விமர்சிக்க கதவுகள் திறந்துள்ளன

**கொழும்பு, ஜன. 17**

**அரசுக்குள் இருந்துகொண்டு அரசை விமர்சிப்பது மிகப் பெரிய அரசியல் தவறு என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**அரசாங்கத்தில் இருந்து வெளியேறி அரசை விமர்சிப்பதற்குக் கதவுகள் திறந்தே இருக்கின்றன எனவும் அவர் கூறினார்.**

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு - கண்டியை இணைக்கும் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகமை முதல் குருநாகல் வரையிலான பகுதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால், நேற்றுமுன்தினம் மாலை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“அரசாங்கத்தில் இருந்துக் கொண்டு அரசை விமர்சிப்பது மேல் நோக்கி பார்த்து எச்சில் துப்புவதைப் போன்றது. அதே போல் ஊடகங்கள் மூலம் நடத்தப்படும் அரசியலுக்கு ஆயுள் குறைவு. நான் 50 வருடங்களாக அரசியலில் அனுபவங்களைப் பெற்றுள்ளேன். எனினும், எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் கொள்கைகளில் இருந்து விலகிச் சென்றதில்லை” - என்றார். (ஐ)

# இரண்டு உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் பதவி நீக்கப்பட்டனர்!

கொழும்பு, ஜன.17

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், பலாங்கொடை நகரசபையின் தலைவர் மற்றும் மாவனெல்லை பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோரை அந்தப் தவிகளிலிருந்து நீக்குவதற்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த இரு தலைவர்களும் சமர்ப்பித்த 2022ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கை தோல்வியடைந்ததையடுத்தே, அவ்விருவரும் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று, வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பலாங்கொடை நகரசபையின் தலைவர் சாமிக ஜயமினி வெவேகெதர, மாவனெல்லை பிரதேச சபையின் தவிசாளர் சந்தன குமார ஆகியோரே பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் பதவி நீக்கப்பட்டமைக்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. (கே)

# எண்ணெய் வளம் உள்ள இடங்களை அடையாளம் காண வேலைத்திட்டம்

கொழும்பு, ஜன. 17

நாட்டில் எண்ணெய் வளமுள்ள இடங்களை அடையாளம் காண்பதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தைத் புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான உபகரணங்களை 35 இலட்சம் ரூபா செலவில் பிரான்ஸிலிருந்து கொள்வனவு செய்ய புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகம நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் முத்தமிழ் விழா நேற்று துர்க்கா மணிமண்டபத்தில்







யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன்முறையாக முத்தமிழ் விழா நேற்றுக் காலை 8.30 மணியளவில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் ஆரம்பமானது.

நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழ் கலாசார விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் மேள தாள வாத்தியங்கள் முழங்க, பொய்க்கால் குதிரையாட்டம் மயிலாட்டம், கோலாட்டம் என்பனவற்றுடன் விருந்தினர்கள் யாழ். மாநகர சபை முன்றலில் இருந்து நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது யாழ். மாநகர சபையால் இயல்துறைக்கான அரச கேசரி விருது கவிஞர்.சோ.பத்மநாதனுக்கு வழங்கப்பட்டது.

இந்த அமர்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் குழுவினரின் வழக்காடு மன்றம் விசேட அம்சமாக அமைந்துள்ளது. (அ-03)

# இலங்கைக்கு அவசர பொருளாதார உதவி இந்தியா வெளியிட்ட ஏழு அம்ச அறிக்கை!

புதுடில்லி, ஜன. 17

இலங்கைக்கு அவசர பொருளாதார உதவி வழங்குவது குறித்த பேச்சுக்கள் இறுதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் இலங்கைக்கான இந்தியாவின் பெரியளவிலான உதவித் திட்டத்தை இறுதி செய்தனர்

ஜனவரி 15, 2022 அன்று வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இலங்கையின் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் ஒரு மெய்நிகர் சந்திப்பை நடத்தினார். கடந்த மாதம் ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்தைத் தொடர்ந்து இந்த உரையாடல் நடைபெற்றது.

1. இலங்கையிலும், இந்தியாவிலும் ஜனவரி 15ஆம் திகதி தைப்பொங்கல் கொண்டாடப்பட்டு வரும் நிலையில், இரு தரப்பும் பரஸ்பரம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

2. ஜெய்சங்கர், இந்தியா எப்பொழுதும் இலங்கையுடன் நிற்கிறது என்றும், கோவிட்-19 தொற்றுநோயால் முன்வைக்கப்படும் பொருளாதார மற்றும் பிற சவால்களை சமாளிப்பதற்கு இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்தார். நெருங்கிய நண்பர்கள் மற்றும் கடல்சார் அண்டை நாடுகளாக, இந்தியாவும் இலங்கையும் நெருங்கிய பொருளாதார தொடர்புகளால் ஆதாயமடைகின்றன.

3. சார்க் நாணய மாற்று ஏற்பாட்டின் கீழ் இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நீடிக்கப்படுவதை இரு அமைச்சர்களும் சாதகமாக குறிப்பிட்டனர். இரண்டு மாதங்களுக்குள் 515.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தீர்வு வழங்கப்படுவது இலங்கைக்கு உதவும்.

4. உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் இந்தியாவில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 500 மில்லியன் டொலர்கள் இந்தியக் கடன் வசதியை விரிவுபடுத்துவதற்கான முன்னேற்றத்தை இரு அமைச்சர்களும் ஆய்வு செய்தனர்.

5. இலங்கையுடன் இந்தியாவின் நீண்டகால ஒத்துழைப்பை பஷில் ராஜபக்ச நினைவு கூர்ந்து, ஆதரவு நடவடிக்கைகளை ஆழ்ந்து பாராட்டினார். துறைமுகங்கள், உள்கட்டமைப்பு, எரிசக்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்சாரம் மற்றும் உற்பத்தி உள்ளிட்ட பல முக்கியத் துறைகளில் இலங்கையில் இந்திய முதலீடுகளை வரவேற்றுள்ள அவர், அத்தகைய முதலீடுகளை ஊக்குவிக்க உகந்த சூழல் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார். இந்த நிலையில், திருகோணமலை எண்ணெய் தாங்கி பண்ணைகளை கூட்டாக நவீனமயமாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் அண்மையில் எடுத்த நடவடிக்கைகள் இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதுடன் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும் என இரு அமைச்சர்களும் குறிப்பிட்டனர்.

6. இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை, மனிதாபிமான அடிப்படையில் விரைவில் விடுதலை செய்வதை உறுதி செய்யுமாறு இலங்கை அரசை ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

7. பகிரப்பட்ட முன்னேற்றம் மற்றும் செழுமைக்கான நீண்டகால பொருளாதார கூட்டாண்மையை நோக்கி பரஸ்பர நன்மை பயக்கும் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வழிநடத்துவதற்கு நெருக்கமான தொடர்பில் இருப்பதற்கு இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

# முற்போக்கு கூட்டணி பிளவுபடாது!

## இராதாகிருஷ்ணன் நம்பிக்கை

கொழும்பு, ஜன. 17

“தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் எவ்வித பிளவும் இல்லை. நாம் ஒன்றாகவே பயணிக்கின்றோம். அடுத்த தேர்தலையும் ஒன்றாகவே எதிர்கொள்வோம்.” - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளுடன் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் ஆண்டுக்கான தைப்பொங்கல் விழா வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இராதாகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இந்தியா மலையக மக்களுக்கும் எமது நாட்டுக்கும் பல உதவிகளை வழங்கி வருகின்றது. ஆபத்தான நேரங்களில் கை கொடுக்கின்றது. அதேபோல இந்தியாவின் உதவிகள் எமக்கு தொடர்ந்து கிடைக்கும். இந்நிகழ்வில் இந்திய தூதுவர் பங்கேற்றமையால் நுவரெலியா மாவட்டம் பெருமையடைகின்றது. நாங்கள் தமிழ் முற்போக்கு கூட்டணியாக செயற்படுகின்றோம். இனியும் செயற்படுவோம். தேர்தல்களையும் கூட்டணியாகவே எதிர்கொள்வோம்-என்றார். (அ)

# கிளிநொச்சி காணி பிரச்னைகளுக்கு ஆறு மாதங்களுக்குள் தீர்வு தருவேன்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

**கிளிநொச்சி, ஜன. 17**

**கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு வகையான காணிப் பிரச்னைகளுக்கும் ஆறு மாதங்களுக்குள் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் காணிப் பிரச்னைகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே, கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா இந்த உறுதிமொழியை வழங்கினார்.

வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றால் கையகப்படுத்தப் பட்டுள்ள காணிகள் அடையாளப்படுதப்பட்டு விடுவிக்கப்படுவதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் தொடர்பாக அங்கு கலந்துரையாடப்பட்டபோது, பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன் மற்றும் எம் .ஏ. சுமந்திரன் ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்கள் ஒரு வரன்முறையின்றி காணிகளைக் கையகப்படுத்தி வைத்திக்கிறது என்றும், காணிகளை கையகப் படுத்துதல் மற்றும் விடுவித்தல் என்பன தொடர்பான உறுதியான கொள்கைகள் ஏதும் பின்பற்றப்படுவதில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவ்வாறு ஒரு கொள்கையின்றி செயல்படுவதாகக் குறிப்பிட முடியாது என்றும், ஜனாதிபதி மற்றும் காணி அமைச்சர், காணி ஆணையாளர் ஆகியோருடன் கலந்துரையாடி இந்தக் காணிப் பிரச்னைகளுக்குத் தம்மால் தீர்வு காண முடியும் என்றும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் பெரும்பாலான மக்களிடம் காணி உறுதிகள் கிடையாது என்றும், அனுமதிப் பத்திரங்களுடன் மட்டுமே அவர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட் டிருக்கிறார்கள் என்றும் குற்றஞ்சாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விரைவில் காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டு துரிதகதியில் காணி உறுதிகள் மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் உறுதியளித்தார்.

ஏற்கனவே, கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் கைத்தொழில் முயற்சிகளுக் கென விடுவிக்கப்படத் தேவையான காணிகள் தொடர்பான பட்டியல் ஒன்று மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரனால் தயாரித்தளிக்கப்பட்டு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இதன்போது, இந்தக் காணிப் பிரச்னைகளை உடனடியாக களத்தில் சென்று ஆராய்ந்து தீர்த்துவைக்குமாறு காணியமைச்சருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதன்படி, வனவளம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் உயரதிகாரிகள் கிளிநொச்சிக்கு வருகை தந்து விடுவிக்கப்படவேண்டும் என்று கோரப்பட்ட காணிகளுக்கு நேரில் களப் பயணம் மேற்கொண்டு அவற்றை விடுவிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

பொன்நகர், அக்கராயன், ஆனைவிழுந்தான், கண்ணகைபுரம், வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, பண்டிவெட்டி, திக்குவயல், பள்ளிக்குடா, புன்னைநீராவி, கோவில்வயல், கண்டாவளை, கல்மடுநகர் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளே இவ்வாறு திணைக்கள அதிகாரிகளால் நேரில் சென்று பார்வையிடப் பட்டன.

இதுதொடர்பான விரிவான விளக்கத்தை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) திரு லிங்கநாதன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் புள்ளிவிபரங்களோடு வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### இராமநாதபுரத்தில் யானைகள் அட்டகாசம்

*கிளிநொச்சி, ஜன. 17*

கிளிநொச்சி - இராமநாதபுரம் - அழகாபுரி பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று அந்தப் பகுதிக்குள் நுழைந்த யானைக் கூட்டம் அறுவடைக்குத் தயாராக விருந்த 1800 மரவள்ளி கன்றுகளை அழித்துள்ளன. நள்ளிரவு தாண்டி ஒரு மணியளவில் நுழைந்த யானைகள் அதிகாலை 4 மணி வரை அங்கேயே நின்றன. அவை, தமது வாழ்வா தார பயிர்களான மரவள்ளி, வாழை, தென்னைமரம் என்பவற்றை முற்றாக அளித்துள்ளன என்று பாதிக் கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பக கிராம சேவையாளர் மற்றும் கிளிநொச்சி பிரதேச செயலர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என பலருக்கும் தெரி வித்துள்ள நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் கோரினர். (ஐ)



### தர்மபுரம் பொலிஸ் பொறுப்பதிகாரி பதவியேற்றார்

*கிளிநொச்சி, ஜன. 17*

கிளிநொச்சி மாவட்டத்துக் குட்பட்ட தர்மபுர பொலிஸ் நிலைப் பொறுப்பதிகாரியாக மீண்டும் டி. எம். ஏ சதுரங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமைகளை, சமய வழிபாடுகளை நிறைவு செய்து உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் மீண்டும் பொறுப்பேற்றார்.



### இரணைமடு குளப் பகுதியில் 102 பானைகளில் பொங்கல்!

*கிளிநொச்சி, ஜன. 17*

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் 102 ஆவது ஆண்டை முன்னிட்டு 102 பானைகளில் நேற்று பொங்கல் பொங்கப்பட்டது. வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் இந்திய துணைத்தூதரகத்தின் பதில் தூதுவரின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

நேற்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில், முன்னதாக இரணைமடு நீர் தேக்கத்தின் கீழுள்ள வயலில் அறுவடை செய்த நெல் கதிர்கள் கனகாம்பிகை அம்மன் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பொங்கல் விழா ஆரம்பமானது.

இந்நிகழ்வில் இந்திய துணை தூதரகத்தின் பதில் தூதுவர், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் திருலிங்கநாதன், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலர் பங்கேற்றனர். (ஐ)

## மலேரியா தொற்று பரவும் ஏதுநிலையில் யாழ்ப்பாணம்!

### மருத்துவர் யமுனாநந்தா எச்சரிக்கை

*யாழ்ப்பாணம், ஜன. 17*

யாழ்ப்பாண குடாநாட்டில் மலேரியாத் தொற்றுக்கான ஏது நிலைகள் அதிகரித்துக் காணப் படுகின்றன.

இதற்கு எடுத்துக் காட்டாக நான்காவது மலேரியா நோயாளியும் இனம் காணப் பட்டு யாழ். போதனா மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

என்று யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா அனுப்பி வைத் துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்படும் நோயாளிகள் இளவயதினராக இருப்பதுடன் வேலை வாய்ப்புகளுக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முயன்று திரும்பி வந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

வடபகுதி இளைஞர்களுக்கு இவ்வாறு பயண ஏற்பாடுகளை பிரான்ஸில் உள்ள பயணமுகவர்கள் செய்கின்றனர். இவர்கள் மூலம் வட பகுதியில் உள்ளவர்கள் விமானம் மூலம் கட்டாருக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து கானா, ஐஸ்வரி கோஸ்ட் நாடுகளுக்கும் அழைத் துச் செல்லப்பட்டுள்ளனர். அந்தநாடுகளில் சுமார் 2 மாதங் கள் தங்கி இருந்துள்ளனர். அங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இவ் வாறு பயணித்தவர்கள் எமது பிரதேசத்திற்கு திரும்பி வரும் போது மலேரியா தொற்றுடன் வருகின்றனர்.

எனவே, மலேரியா நோய் பரவலைத் தடுப்பதற்கான விழிப் புணர்வை நாம் அதிகரிக்க வேண் டும். எமது சுற்றுச்சூழலை நுளம்பு பெருகாது பாதுகாக்க வேண் டும். காய்ச்சல் உடையவர்க ளுக்கு மலேரியா நோய்க் கிருமி கள் தாக்கி உடையதா என குருதிப்பரிசோதனை செய்தல் அவசியம். மேலும் மலேரியா அச்சமுள்ள நாடுகளுக்கு பயணங் களை மேற்கொள்பவர்கள் அதற்குரிய தடுப்பு மருந்துகளை சுகாதார வைத்திய அதிகாரிக ளிடம் பெற்றுச் செல்லல் அவசியம் - என்று தெரிவித்துள்ளார். (ஐ)

*புங்குடுதீவில் மரக்குற்றிகள் கடத்தல்:*

## "வேலணை செயலத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லை!"

*யாழ்ப்பாணம், ஜன. 17*

புங்குடுதீவில் இருந்து சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்பட்ட பனை மரக் குற்றிகளுக்கும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் எவ்வித்த் தொடர்பும் கிடையாது என வேலணை பிரதேச செயலாளர் எஸ். கிரிதரன் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புங்குடுதீவில் இருந்து 9 பனை மரங்களில் இருந்து 55 சீவிய மரத் துண்டுகளை ஏற்றுவதற்காக பிரதேச செயலகத்தால் அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், அதற்கு மேலதிகமாக பல பனை மரத் துண்டுகள் ஏற்றப்பட்ட நிலையில் லொறி ஒன்று, பொலிஸாரால் சோதனையிடப்பட்டு, அதில் இருந் தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இச்சம்பவத்துடன் பிரதேச செய லக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவையாளருக்கு தொடர்பு இருப்பதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

அனுமதிக் கடிதத்தை மீறி, அளவுக்கு அதிகமான மரக் குற்றிகளை ஏற்றியமை உறுதிசெய்யப்பட்ட நிலையில், எம்மால் வழங்கப்பட்ட அனுமதிக் கடி தத்தை பொலிஸாரிடம் தெளிவுபடுத்தியுள் ளேன்.

ஆகவே, பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் மேற்படி கடத்தலுக்கும் தொடர்பு இல்லை என் பதை கூறிக் கொள்வதோடு, சம்பந்தப்பட்டிருந்தால் பொலிஸ் விசாரணைகளில் தெரியவரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# கஜேந்திரகுமாரின் போராட்ட அறிவிப்பை வரவேற்கிறேன்!

## மனோ கணேசன் எம். பி. அறிவிப்பு

**கொழும்பு, ஜன. 17**

**"தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் போராட்ட அறிவிப்பை நான் முழு மனதுடன் வரவேற்கின்றேன். அது ஒரு நாள் போராட்டமாக இல்லாமல், தொடர் போராட்டமாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றேன்."**

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நண்பர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இம்மாத இறுதியில் அரசியல் போராட்டத்தை அறிவித்துள்ளார். உண்மையில் அவரது கட்சி நிலைப்பாட்டின்படி இது மிக சரியான முடிவாகும்.

"13 மற்றும் மாகாண சபைகள் வேண்டாம்" என்றால் மாற்றுப் பயணம் இருக்க வேண்டும். விடுதலைப்புலிகள் 13ஐ நிராகரித்தார்கள். ஆனால், நிராகரித்து விட்டு, "எல்லாம் தானாக மாறும்" என அவர்கள் வாளாவிருக்க இல்லை. புலிகளது வழிமுறையை ஏற்காதவர்கள்கூட, மாற்றுப் பயணத் திட்டத்தை முன்னெடுத்த அவர்களது அரசியல் நேர்மையை மதித்தார்கள்.

2005 முதல் 2009 வரை இறுதிப் போர் காலத்தில் கொழும்பில் வந்து அடைக்கலம் புகுந்த வடக்கு - கிழக்கு புலத்து உடன்பிறப்புகளுக்காக நானும், எனது கட்சியும், உருவாக்கிய 'மக்கள் கண்காணிப்பு குழு' என்ற மனித உரிமை இயக்கமும் வீதி போராட்டங்களை உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நடத்திப் போராடினோம்.

மேற்கு நாடுகளில் தஞ்சம் புகுந்து, அங்கிருந்தபடி நான் அறிக்கை அரசியல் செய்யவில்லை. இது இங்கே சிங்கத்தின் குகையில் இருந்தபடி நான் நடத்திய என் நேர்மையான அறப் போராட்ட வரலாறு.

ஆகவே, "13 என்பது முதல் படிகூட கிடையாது. அதை தீண்டவும் மாட்டோம். அதற்கு அப்பால் போயே தீருவோம்" என்பவர்கள் மாற்று போராட்ட பயணத்தை முன்னெடுக்க வேண்டும். 13 இற்கு அப்பால் செல்லும் அந்த மாற்றுப் பயணம் ஊடக சந்திப்புகளுக்கு அப்பால் செல்ல வேண்டும்.

ஊடகங்களைச் சந்தித்து, "அமெரிக்காவில் இருந்து இந்திரன் கொண்டு வருகின்றான். ஆபிரிக்காவில் இருந்து சந்திரன் கொண்டு வருகிறான்" என்று அறிக்கை இடுவதெல்லாம் போராட்டம் அல்ல. ஆகவே, நண்பர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் போராட்ட அறிவிப்பை நான் முழு மன துடன் வரவேற்கின்றேன். அது ஒரு நாள் போராட்டமாக இல்லாமல், தொடர் போராட்டமாக இருக்க வேண்டும் எனவும் வலி யுறுத்துகின்றேன்" - என்றார். (ஐ)



# ஒமைக்ரோனை கட்டுப்படுத்த யாழில் படைகள் களமிறக்கம்!

## இன்று கொட்டடியில் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜன. 17

ஒமைக்ரோன் தொற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் இராணுவத்தினர் தடுப்பூசி ஏற்றும் விசேட செயல்திட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இதன் ஓர் அங்கமாக யாழ்ப்பாணம் கோட்டை பகுதியிலும் படையினர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்தனர்.

யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் பணிப்புரையின் கீழ் நாட்டில் ஒமைக்ரோன் தொற்று அதிகரித்து வரும் நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் ஏற்றப்படும் நடவடிக்கை ஆரம்பமானது.

ஏற்கனவே ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் தடுப்பூசியை பெற தயக்கம் காட்டி வருகின்றனர். இந்தநிலையிலேயே இராணுவத்தினர் விசேட செயல்திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, இன்று திங்கட்கிழமை இராணுவத்தின் விசேட தடுப்பூசி வழங்கும் முகாம் யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் காலை தொடக்கம் மாலை வரை இடம்பெறவுள்ளது. (ஐ)


















# வடமராட்சி கிழக்கில் பட்டப்போட்டி; பல ஆயிரம் மக்கள் கண்டுகளிப்பு!!

வடமராட்சி, ஜன. 17

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் முதல் தடவையாக நேற்று முன்தினம் சனிக்கிழமை பட்டப்போட்டி நடத் தப்பட்டுள்ளது. கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டு கழகம் நடத்திய இந்தப் போட் டிக்கு டான் தொலைக்காட்சி குழுமம் அனுசரணை வழங்கியிருந்தது.

டான் தொலைக்காட்சி குழுமத்தின் ஏற்பாட்டில் இந்தப் போட்டி இடம்பெற்றது.

கட்டைக்காடு பகுதியில் பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமான இந்தப் போட்டியில், வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பிரிவு, வெளிப் பிரதேசங்கள் கொண்ட பிரிவு என இரு பிரிவுகளாக இந்தப் போட்டி இடம்பெற்றது.

அருட்தந்தை வண. பிதா ரமேஷ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகர மூர்த்தி, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், கேசவன் சயந்தன், மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டியின் நடுவர்களாக வல்வெட்டித்துறை சிதம்பர கல்லூரி அதிபர் லயன் வே.பரமேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் சி.பிரசாத், சமாதான நீதிவான் வசந்தகுமார் ஆகியோர் கடமை வகித்தனர்.

இந்தப் போட்டியில் இரு பிரிவுகளிலும் சுமார் 30இற்கும் மேற்பட்ட பல்வேறு வகையான பட்டங்கள் பங்கேற்றன. இதில், முதலாம் இடத்தை அன்னப் பட்சி பட்டம் வென்று 20 ஆயிரம் ரூபாய் பணப் பரிசையும், இரண்டாவது இடத்தை லிற்றோ எரிவாயு சிலிண்டர் பட்டம் கைப்பற்றி 15 ஆயிரம் ரூபாய், சுழலும் பெட்டி பட்டம் மூன்றாமிடத்தை வென்று 10 ஆயிரம் ரூபாய் பரிசையும் வென்றன. இந்தப் போட்டியில் 10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்தப் போட்டியை கண்டுகளிக்க ஐந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# 13இற்கு அப்பால்.... அப்பால்...



# தாமதப்படும் மோடி சந்திப்பும் இழுபடும் கடித கையளிப்பும்

பனங்காட்டான்



கடந்துபோன ஆண்டு விட்டுச் சென்ற அரசியல் முறுகல்கள், ஸ்திரமற்ற தன்மைகள், உறவுகள் முறிவுகள் என்பவை பிறந்திருக்கும் புத்தாண்டிலும் கொரோனாவிலும் பார்க்க வீரியம் மிக்கதாக அமையப்போவதை காணக்கூடியதாகவுள்ளது.

இவ்விடயத்தில் சிங்கள தேசத்துக்கும் தமிழர் தாயகத்துக்குமிடையில் பெரும் வித்தியாசம் தெரியவில்லை. இராணுவ ஆட்சியில் அரைத்தூரத்தைத் தாண்டியுள்ள கோட்டாபய அரச இயந்திரம் உள்வீட்டு முரண்களை குசினிக்குள் தீர்க்க முடியாத நிலையில் தன்னைத் தானே சந்திக்குக் கொண்டுவந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மூத்த அரசியல்வாதி ஒருவரை கழுத்தில் பிடித்து வெளியே தள்ளியுள்ளது. இராஜாங்க அமைச்சராகவிருந்த சுசில் பிரேமஜெயந்த, சுதந்திரக் கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராகவும் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அமைச்சரவைகளில் முக்கியமான ஐந்து வெவ்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்த ஒரு வழக்கறிஞர்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை பகிரங்கமாக விமர்சித்தவர் என்ற காரணம் கூறி இவரை கோட்டாபய தமக்குரிய நிறைவேற்று அதிகார வழியாக பதவி நீக்கம் செய்தார். அடுத்து அவரது எம்.பி. பதவியும் பறிக்கப்படக்கூடும்.

பதவி பறிப்புக்கு பதில் அளித்துள்ள சுசில், தாம் ஜனாதிபதி பதவியை விமரச்சிக்கவில்லை என்றும் ஜனாதிபதியையே விமர்சித்ததாகவும் கூறி - அவர்தான் பிரச்னைக்குரியவர் என்று விளக்கமாக விபரித்துள்ளார். தமது பதவி நீக்கம் எதிர்கால அரசியலுக்கான ஆசீர்வாதம் என்று அவர் கூறியிருப்பது கவனிக்கப்பட வேண்டியது.

இதன் எதிரொலியாக, இவரை சில எதிரணிகள் தங்களுடன் இணையுமாறு அழைப்பு விடுக்க ஆரம்பித்துள்ளன. இவர் இன்னொரு மகிந்தாவாக மாறுவாரா அல்லது மைத்திரியாகிப் போவாரா என்பதை அறிய அடுத்த தேர்தல்வரை காத்திருக்க வேண்டும்.

அமைச்சர்களாக இருந்து கொண்டு அரசாங்கத்தைத் தினந்தினம் விமர்சித்து வரும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் மீது கை வைக்க ஏதோ காரணத்தால் பின்னடிக்கும் ஜனாதிபதி, இவர்களுக்கான எச்சரிக்கைக் குறியீடாகவே சுசில் மீது கை வைத்ததாக சொல்லப்படுகிறது.

அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை மீறுபவர்களை வெளியேற்றுவேன் என்று அடிக்கடி கூறி வரும் ஜனாதிபதி, இந்த மூன்று அமைச்சர்கள் மீதும் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை. எங்களை வெளியேற்றுங்கள் என்று மூன்று அமைச்சர்களும் கோரஸ் போடுகின்றனர். நீங்கள் வெளியேறிப் போகலாமென்று கோட்டாபய அணியினர் நாளொரு வண்ணம் கூக்குரல் இடுகின்றனர். இவர்களை வெளியேற்றினால் அவர்களின் எதிர்காலம் பிரகாசமாகிவிடுமென்ற அச்சமே கோட்டாபய நடவடிக்கைக்கு தாமதம். தாமாக வெளியேறினால் தங்களின் வருங்கால அரசியல் பாழாகிவிடுமென்று மூன்று அமைச்சர்களும் அஞ்சுகின்றனர்.

இதற்கிடையில், மைத்திரி தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரை கௌரவமாக அரசிலிருந்து வெளியேறுங்கள் என்று தொடர்ச்சியாக வந்த குரல்களில் இறுதியாக நாமல் ராஜபக்சவும் இணைந்துள்ளார். நிலைமை இவ்வாறு தொடருமானால் பல அரசியல் சடுகுடு விளையாட்டுகளை தெற்கில் விரைவில் பார்க்க முடியும். தமது இருப்பையே நிரந்தரமாக்க முடியாது தத்தளிக்கும் மகிந்தவினால் இவ்விடத்தில் எவரையும் சமாளித்து காலத்தை இழுக்க முடியாது.

கடனில் மூழ்கித் தத்தளிக்கும் இலங்கையின் மீட்பராக சீனா தொடர்ந்து தன்னை அடையாளம் காட்டி வருகிறது. மாமியார் வீட்டுக்கு அடிக்கடி செல்லும் மருமகன்போல சீன அமைச்சர்கள் கொழும்புக்குச் செல்கிறார்கள். இவர்களுக்கு சீனாவில் வேறு வேலை இல்லையா என்றும் ஓர் அரசியல்வாதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது போதாதென்று, கொழும்பிலிருக்கும் சீனத் தூதுவர் தமது செயற்பாடுகளிலும் கருத்துத் தெரிவிப்புகளிலும் இந்தியாவுக்குக் கடுப்பேற்றி வருகிறார். யாழ்ப்பாணத்தில் நின்றபோது இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரமென்று வினவியதும், மன்னாருக்குச் சென்று ராமர் பாலத்தின் நிலத்தூண்களை எண்ணிப் பார்த்ததும் வேடிக்கையான அல்லது தற்செயலான விடயங்கள் அல்ல.

யாழ்ப்பாணம் இலங்கையின் வடக்கேயுள்ள நகரமேயன்றி, எந்த நாட்டினதும் தெற்கேயுள்ள நகரமல்ல என்று சீனத் தூதுவர் கொழும்பில் ஊடகவியலாளர் மத்தியில் தெரிவித்துள்ள கருத்து இந்தியாவுடன் நேரடியாகச் சீண்டுவது. யாழ்ப்பாணம் இந்தியாவுக்கு மட்டும் சொந்தமானதல்ல - தங்களுக்கும்தான் சொந்தமானது என்று கூறாமல் கூறுவதாக அமைந்துள்ளது சீனத்தூதுவரின் கருத்து.

இவ்வாறான அரசியல் பின்னல்கள் வலை விரித்துக் கொண்டிருக்கும் வேளையில், ஏழு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து கையொப்பமிட்ட கடித விவகாரமே கடந்த சில வாரங்களாக முக்கிய பேசுபொருளாகியுள்ளது. ஊடகங்களுக்கும் இப்போதைக்கு நல்ல தீனியாக இது அமைந்துள்ளது.

கடந்த பல வாரங்களாக நீண்டு இழுபட்டு, பல கூட்டங்கள் நடத்தி, இரகசிய சந்திப்புகளை ஏற்படுத்தி இழுபறிப்பட்ட இந்தியாவுக்கான கடித விபரம் ஓரளவுக்கு நன்கறியப்பட்டதாகி விட்டது. இதன் பின்னாலான சில நிகழ்வுகளை மட்டும் இங்கு பார்க்கலாம்.

இந்தியாவில் விருப்பத்தின் பேரில் தமிழ்க் கட்சிகளின் இணைப்புக்கு அத்திவாரக்கல் போட்டவர் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா. ஒருவாறு ஒரு கூட்டத்தை நடத்தினார். ஆனால், சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் எதிர்ப்பினால் அது இடைநடுவில் கைவிடப்பட்டது.

பின்னர் ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் கைகளுக்கு இது ஒப்படைக்கப்பட்டது. யாரால் ஒப்படைக்கப்பட்டது என்பது பரம இரகசியமல்ல. ரெலோ பேச்சாளர் குருசாமி சுரேந்திரனே இக்கடித வரைவாளராக அடைக்கலநாதனால் நியமிக்கப்பட்டார். (கூட்டமைப்புக்கு ஒரு சுமந்திரன் போன்று ரெலோவுக்கு சுரேந்திரன் ஆளுமை மிக்கவராக இப்பொழுது வளர்க்கப்பட்டுள்ளார்).

இதன் பின்னரே அடுத்த நகர்வு ஆரம்பமானது. தமிழர் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனையும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமையும் தமிழ்க் கட்சிகளின் கூட்டுக்குள் தந்திரோபாயமாக உட்புகுத்தியதும் அதே அயல் தரப்புத்தான். தமிழ்க் கட்சிகளின் கூட்டை ஆதரிக்காது, அதனைப் புறந்தள்ளிச் செல்லும் சம்பந்தனை இதற்குள் இழுத்து வர வைக்கப்பட்ட பொறியாக இது மேற்கொள்ளப்பட்டது.

இவர்களின் அழைப்பை ஏற்று சம்பந்தன் உள்ளே வர, அவரின் பின்னால் சுமந்திரனும் சென்றார். கடித வரைவுகள் பல மாறி மாறி உருமாறின. எதிர்பார்க்கப்பட்டவாறு மனோ கணேசனும் ரவூப் ஹக்கீமும் கடிதத்தில் ஒப்பமிட முடியாத நிலை வந்தது. அவர்கள் நிலைப்பாட்டில் முடிவு சரியானது.

சுமந்திரன் வீட்டில் செப்பனிடப்பட்ட இறுதி வரைவை தமிழரசின் மத்திய குழு நிராகரித்துவிட்டது. இதற்கு முன்னைய வரைபையே இந்திப் பிரதமர் மோடிக்கு அனுப்ப முடிவானது. இதில் உடனடியாக ஒப்பமிட மாவை சேனாதிராஜா தயாராக இருக்கவில்லை.

எதிர்காலத்தில் எப்போதாவது மாவை சேனாதிராஜா எடுத்த நடவடிக்கையால் தான் இப்படி நடந்தது என்று தம்மீது எவரும் குற்றம் சாட்டாது தப்பவே சம்பந்தன் ஒப்பமிட்ட பின்னர் ஒப்பமிடுவதென மாவையர் தீர்மானித்தார். அப்படியே ஒப்பமும் இட்டார். ஆக, கடிதத்தில் ஒப்பமிட்ட ஏழு தலைவர்களில் மாவையரே கடைசி. ஆனால், இவ்வாறான ஒரு செயற்பாட்டை ஆரம்பித்த முதலாமவர் மாவையரே என்பதை தமிழ்த் தேசிய வரலாறு பதிவிலிடும்.

பதின்மூன்றாம் திருத்தம் என்றும், பதின்மூன்றுக்கு அப்பால் என்றும், அதற்கும் அப்பால் என்றும், புதிய அரசியல் அமைப்பில் நிரந்தரத் தீர்வென்றும் கேட்டுக் கேட்டு புளிச்சுப் போன சொல்லாடல்கள் எழுத்து வடிவில் ஒப்பத்தோடு கடிதமாகியுள்ளது. தமிழ்த் தலைமைகள் (கஜேந்திரகுமார் அணி தவிர) நீண்ட இழுபறிக்குப் பின்னர் ஒன்றுபட்ட ஒரு நிகழ்வு என்ற வகையில் இது வரவேற்கப்படலாம். தமிழர் தரப்பு ஒற்றுமையாக வந்தால் இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கலாமென கடந்த வருட பிற்பகுதியில் இலங்கை சென்ற இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஸ் வர்தன் சிங் கூட்டமைப்பிடம் சொன்னதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சி பலராலும் வரவேற்கப்படுகிறது.

கடந்த காலத்தில், தமிழர் தரப்புகள் சில எடுத்த இவ்வாறான முயற்சியை ஏதோ காரணத்தால் இழுத்தடித்து வந்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், பிரதமர் மோடியை சந்திக்க இந்தியா வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பையும் ஏற்க முடியாத காரணங்கள் கூறி பின்தள்ளினார். தமது கடவுச்சீட்டு காலாவதியாகி விட்டதென்றும், மாவையின் குடும்பத் திருமணம் என்றும் குறிப்பிட்ட திகதியை மாற்றித் தருமாறு விடுத்த அவரது வேண்டுகோளுக்கு இந்தியா இதுவரை பதிலளிக்கவில்லை.

இப்போது ஏழு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஒப்பமிட்ட கடிதமும் அவ்வாறே இழுபடுகிறது. இந்த மாதம் பதினோராம் திகதி செவ்வாய்க்கிழமை இக்கடிதம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். இது நடைபெறவில்லை.

அன்றைய தினம் அட்டமி நாளென்றும், சகுனம் சரியில்லை என்றும் சம்பந்தன் கூறியதால் கையளிப்பு தாமதமானதாக 'ஈழநாடு' பன்னிரண்டாம் திகதிய முதற் பக்கத் தலைப்புச் செய்தியில் தெரிவித்திருந்தது. மறுநாள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே அவசர அழைப்பின் பேரில் புதுடில்லி சென்றுவிட்டார். ஏழு கட்சிகள் ஒப்பமிட்ட கடிதம் இன்னும் கையளிக்கப்படவில்லை. பதினெட்டாம் திகதி கையளிக்கப்படலாமெனச் சொல்லப்படுகிறது.

தூதுவர் கோபால் பாக்லேயும் கடிதத்தைப் பெறுவதற்கு சம்பந்தன்போல நாளும் கோளும் பார்ப்பாரானால், கடிதக் கையளிப்பு கூட்டமைப்பினர் மோடியைச் சந்திப்பது போன்று இழுபறியாகினாலும் ஆச்சரியப்பட முடியாது. இதற்கிடையில் பதின்மூன்றாம் திருத்தத்தின் பாதக நிலைமையை விளக்கி தமிழர் தாயகம் முழுவதும் தொடர் பரப்புரைகளை மேற்கொள்ள கஜேந்திரகுமார் அணி அறிவிப்புக் கொடுத்துள்ளது.

உண்மையைச் சொல்வதானால் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழான மாகாண சபை அமைப்பு கழுதை தேய்ந்த கதையாகி விட்டது. கடந்த 34 ஆண்டுகளில் இதனைத் திரும்பியே பார்க்காத இந்தியா, இதுவரை கையளிக்கப்படாத கடிதத்துக்காக ஏதாவது செய்யுமா?

வடக்கு கிழக்கு இணைப்பு இலங்கைச் சட்டத்தின் துணை கொண்டு பிரிக்கப்பட்டு விட்டது. முதலில் கிழக்கு மாகாணத்துக்கு தனியாக தேர்தல் நடத்தப்பட்டது. அது கடந்து பல ஆண்டுகளின் பின்னர் வடமாகாண தேர்தல் நடத்தப்பட்டது. ஒப்பந்தத்தில் கூறப்பட்ட காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம் மாகாண சபைகளுக்கு இல்லையென்றாகி விட்டது. இவைகளெல்லாம் இடம் பெற்றபோது வாய் மூடி மௌனித்து நின்ற இலங்கை இந்திய ஒப்பந்தப் பங்காளரான இந்தியா இனி ஏதாவது செய்யுமென நம்ப இடமுண்டா?

■




# ‘புதிய விடியலை நோக்கி பறப்போம்!’



**பகவான் சிங்**
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

கடந்த ஞாயிறன்று நான் உங்களை ரொம்பவே மிஸ் பண்ணினேன். மடிக்கணினியை மருத்துவமனைக்குக் கொண்டுபோனேன், ஆனால், சரியான உடம்புவலியும் காய்ச்சலும் என்னை வாட்டி எடுத்ததன் காரணமாக அந்த மடிக்கணினியைத் திறக்கக்கூட சக்தி இல்லாமல் போய்விட்டது. ‘கோவிட் ஒமைக்ரோன்’ என்னைத் தாக்கியது. பரிசோதனை முடிவுகள் ‘பொசிடிவ்’ என்று வந்த ஒரு மணி நேரத்துக்குள் சென்னை மாநகராட்சி சுகாதார அதிகாரிகள் ஒரு மருத்துவருடன் என் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். அரசு மருத்துவமனையான கிண்டி கிங்க்ஸ் இன்ஸ்டிட்யூட்டில் ஜனவரி 7, வெள்ளியன்று சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன்.

இந்த வெள்ளியன்று, அதாவது ஜனவரி 14ஆம் திகதி அன்றுதான் மருத்துவர்கள் வீட்டிற்கு செல்லலாம் என்று கூறினார்கள். என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்று ஒரு நீண்ட பட்டியலும் தந்தார்கள். முக்கியமாக, வீட்டிற்குச் சென்ற பிறகு என்னை ஒரு வாரம் தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும், வீட்டில் இருப்பவர்கள் யாரையும் அணுகக்கூடாது என்றும், அடிக்கடி சூடான தண்ணீர் குடிக்கவேண்டுமென்றும்.... வகையறா வகையறா.

நம்மை சுற்றிலும் நோயும் துன்பமுமாக இருக்கலாம், ஆனாலும், நம்மை எதுவும் தொடாது என்று நாம் நினைக்கிறோம்.... நம்மை அது வந்து அடிக்கும் வரை. எனக்கும் அதுதான் நடந்தது. முகக்கவசம் அணிகிறேன், கோவிட் பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைபிடிக்கிறேன் என்பதால் என்னை வைரஸ் தாக்காது என்று நினைத்தேன். நான் மருத்துவமனையில் சந்தித்த பலரும் அதையேதான் கூறினார்கள், “எல்லா விதத்திலும் பாதுகாப்பாக இருந்தேன் ஆனாலும் வந்துவிட்டது; எப்படி என்று தெரியவில்லை”.

இதை நெடுங்காலம் கேட்டிருக்கிறேன், இப்போதும் தொடர்ந்து கேட்கிறேன். இதை இறுதிவரை அடிக்கடி கேட்பேன் என்பதும் எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

“உலகைக் கட்டுப்படுத்துவதற்காக சீனர்கள் உருவாக்கிய ஒரு புதிரான நோய் இது, மேலை நாட்டு விஞ்ஞானிகள் தங்களுடைய ஆய்வுக்கூடத்தில் ஒரு தடுப்பூசியைக் கொண்டு வந்ததும், சீனர்கள் ஒரு புதிய உருமாற்றதுடன் வைரஸை உருவாக்குகிறார்கள்” என்று பலர் குமுறுகிறார்கள். கொரோனா கோவிட்-19 எங்கிருந்து உண்மையாகவே வந்தது, அதன் பரிணாம வளர்ச்சி என்ன, அது முடிவுக்கு வருமா, எப்படி அதை முடிவுக்குக் கொண்டுவருவது போன்ற பல கேள்விகளுக்கு அறிவியல் உலகத்தால் முடிவு கண்டுபிடிக்கமுடியவில்லை என்பதும் சலிப்புடன் பேசப்படுகிறது.

‘கண் தெரியாத நான்கு பேரும் ஒரு யானையும்’ என்ற கதையை இந்த சூழ்நிலை நினைவுபடுத்துகிறது. ஒருவர் காலை மட்டும் தொட்டுப் பார்த்துவிட்டு, யானை ஒரு தூண் போன்றது என்றார், மற்றொருவர் துதிக்கையை மட்டும் தொட்டுவிட்டு யானை ஒரு பெரிய மலைப்பாம்பு போன்றது என்றார். மற்றொருவர் காதுகளை மட்டும் தொட்டுப்பார்த்துவிட்டு யானை ஒரு முறம் போன்றது என்றாராம்.

உலக சுகாதார அமைப்பின் நிபுணர்கள் உட்பட, இதைப் பற்றி அறிந்த பலரும் குழப்பமான பதில்களும், முரண்பாடான கருதுகோள்களும் சொல்லிவருகிறார் கள். அடுத்த சில நாட்களிலேயே தாங்கள் சொல்லியதற்கு முரண்பட்டு, புதிய ஒரு விளக்கத்தையும் கருதுகோளையும் சொல்வார்கள். இவற்றில் ஓர் அம்சம் மட்டும் நிலையாக இருந்துகொண்டிருக்கிறது - அறிவியல் குழுக்களில் உள்ள புத்திசாலிகள் உட்பட மனித இனமே இந்த வைரஸுக்கு எதிரான போரில் கையறு நிலையில் இருக்கிறது, இது சமீபத்தில் மனித வாழ்வுக்கே பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது. டிசம்பர் 2019இல் சீனாவின் வூஹானில் முதல் நோயாளிகள் கண்டறியப்பட்டபின்பு உலகமெங்கும் இறப்பு எண்ணிக்கை உயர்ந்துகொண்டிருக்கிறது என்பதால் வரும் இந்தக் கையறு நிலையை நாம் அனைவரும் அறிந்திருக்கலாம். இந்தியாவில் ஜனவரி 31, 2020இல் முதல் நோயாளி கண்டறியப்பட்டார்.

உலக அளவில் கோவிட்டால் ஏற்படும் இறப்புகளைப் பற்றிய தகவல்களை இந்த சுட்டியில் நாம் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம் : https://www.worldometers.info/coronavirus/coronavirus-death-toll/

ஜனவரி 15ஆம் திகதி சனிக்கிழமை மதியம் இந்தக் கட்டுரையை எழுதுவதற்காக உட்காரும்போது, இந்த மீட்டர் இன்று காலை GMT 7:24 மணி நிலவரப்படி இதுவரை உலகில் 5,547,909 பேர் இறந்திருக்கிறார்கள் என்று காட்டுகிறது. “222 நாடுகளில் 324,441,083 நோயாளிகள் இதுவரை கண்டறியப்பட்டிருக்கிறார்கள். இறப்பு விகிதம் இன் னும் கணக்கிடப்பட்டுவரு கிறது” என்றும் அந்த இணையதளத்தில் கூறப் படுகிறது.

1918-1920இல் 500 மில்லியன் மக்களை பாதித்த மோசமான ஸ்பானிஷ் ஃப்ளூவை கோவிட்-19 நினைவுபடுத்து கிறது. அந்த நோய் வந்த முதல் ஆறு மாதங்க ளில் 25 மில்லியன் பேர் இறந்தார்கள் என்று ஓர் அறிக்கை கூறுகிறது. இப் போது இருப்பதுபோல் மருத்துவ வசதி களும் மருத்துவ அறிவியலும் நவீனமாக வில்லை என்பதால், அப்போது பெரும்பாலான இடங்களில் தனிமனித இடைவெளிதான் தொற்று எண்ணிக் கையைக் குறைத்தது. இப்போதும்கூட முக்கக் கவசம், கை கழுவுதல் போன்ற பிற தடுப்பு நடவடிக்கைகள் தவிர ‘தனிமனித இடைவெளி’ என்பதுதான் பல அரசு களால் பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால், பலர் இந்த விதிகளை மீறுகிறார்கள், தங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் வலுவாக இருப்பதால் இந்த வைரஸ் தாக்காது என்று நம்புகிறார்கள். வேறு சிலரோ, கடவுள் பார்த்துக்கொள்வார் என்கிறார்கள்!

இந்த கொள்ளை நோய் பலரைக் கொன்றதோடல்லாமல், பலருக்கு நுரையீரல், இதயம் மற்றும் சிறுநீரக பாதிப்பு உள்ளிட்ட பல நீண்டகால பின்னடைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. வீட்டு அளவிலிருந்து தேசிய, சர்வதேச அளவில் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. பலரது தொழில் பாதிக்கப்பட்டது, தொழிற்சாலைகள் மூடப்பட்டன, பல தொழிலதிபர்கள் கடுமையான நஷ்டங்களை சந்தித்தனர், சிலர் திவாலாகும் நிலையும் ஏற்பட்டது. நாம் அனைவரும் மீண்டு எழுவதற்கு நீண்ட காலம் ஆகலாம் என்று பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்தியாவில் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை, நமது அரசுகள் வைரஸைக் கட்டுப்படுத்த சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அவசியமான மருத்துவம் மற்றும் நிதி வசதியை செய்து தருகிறார்கள். மு. க. ஸ்டாலின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு இந்த விஷயத்தில் பொருளாதார சிக்கல்களையும் மீறி, சிறப்பாக இயங்குகிறது. அண்டை நாடான இலங்கையில் உள்ள நிதிப் பிரச்னைகள் பற்றிப் படிக்கும்போது மிகவும் கவலையாக இருக்கிறது, எல்லா பிரச்னைகளும் கோவிட்-19 காரணமாக ஏற்பட்டவை அல்ல.

மக்களை பாதிக்கிற இன்னொரு வைரஸும் உண்டு, அதன் பெயர் ‘அரசியல் சுயநலம்’. சில தலைவர்கள் பொதுநலன் மற்றும் நாட்டின் நலனையும் விட, சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள். இது இலங்கையில் மட்டுமே இருக்கிறது என்று நான் சொல்லவில்லை, இது எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. பொருளாதார வளர்ச்சியும் ஜனநாயகமும் உள்ள வளர்ந்த நாடுகள் என்று சொல்லப்படுகிற நாடுகளிலும் இருக்கிறது. மனிதன் ஒரு விநோதமான விலங்கு. அவன் சிக்கலானவன், சுயநலமானவன். நம்மில் வெகு சிலரே தமக்காக இல்லாமல் மற்றவர்களுக் காக வாழ்கிறோம்.

பெரிய அளவில், மருந்து நிறுவனங்கள், மருத்துவத்துறை, தடுப்பூசி தயா ரிப் பவர்கள் ஆகியவர்கள் அடைந்த செழிப்பை கவனிக்கிறேன். நிபுணர்களுக் கான ஊதி யம் உட்பட ஆராய்ச்சி மற் றும் மேம்பாட்டுக்காக அவர்கள் அதிக மாக செல வழித்தாலும், வளராத நாடுகளில் உள்ள மக்களுக்கு உதவ இந்த பன்னாட்டு அமைப்புகள் எத்தனையோ தியாகங்களை யும் மானியங்களையும் செய்திருக்கலாமே? அது நடக்கவில்லையே!

கோவிட்டிலிருந்து மீண்டவர்களின் நல்வாழ்வையும் பலத்தையும் திரும்பப் பெற ஊட்டச்சத்து மிக்க உணவு அவசியம் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். வீடு முதல் கார்ப்பரேட்டுகள் மற்றும் தேசிய அளவில்கூட பொருளாதாரத்தை மறுபடி கட்டமைக்க தனிப்பட்ட மனிதனின் ஆரோக்கியம் அவசியம். பிராந்திய, தேசிய மற்றும் உலக அளவில் இதற்கான முயற்சிகள் இருக்கின்றன என்றால், அதை நான் பார்க்கவில்லை. நீண்ட உணவு வரிசைகளில் நிற்கும் மக்களின் முகங்களில் சோகத்தைப் பார்க்கிறேன். விலைவாசி உயர்வதால் சராசரி மனிதனுக்கு அத்தியாவசியப் பொருட்களும் கிடைப்பதில் பிரச்னை இருக்கிறது என்று படிக்கிறேன். அச்சடிக்கக் காகிதம்கூட இல்லாமல் நாளிதழ் நிறுவனங்களும் இழுத்து மூடப்படும் என்று கேள்விப்படுகிறேன்.

சுயநலமிக்க அதே மனிதன், புதுமைகளை நிகழ்த்துபவனாகவும் இருக்கிறான் - எத்தனை பெரிய சவாலாக இருந்தாலும் அதிலிருந்து எப்படி விடுபடுவது என்று அவனுக்குத் தெரியும், தன் துன்பங்களுக்குத் தீர்வு தேடத் தெரியும். என் ஈழ நண்பர்கள் தங்களுடைய பிரச்னைகளிலிருந்து விடுபட்டு, பீனிக்ஸ் பறவையைப்போல சாம்பரிலிருந்து எழுந்து, இந்தப் பொங்கல் திருநாள் தரும் புதிய விடியலை நோக்கி பறப்போம் என்று உறுதியாக நம்புகிறேன்.

உங்களது சுற்றமும் நட்பும் சூழ, நீங்கள் பொங்கல் கொண்டாட்டங்களுக்குத் திரும்புமுன், ஒரு சிறு எச்சரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

ஈழத்தில் உள்ள சகோதர சகோதரிகள், உங்களது பொரு ளாதார சூழலை ஆதாயமாக எடுத்துக் கொண்டு, வல்லரசுகள் நம் முன் வைக் கும் கடன் பொறியில் மாட்டிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். பொங்கல், வடை, பாயாசம் நிறைந்த வாழையிலை விருந்தாக அது காட்சியளிக்கலாம், ஆனால், அந்த இலையில் நிரந்தர அடிமைத்தனம் என்ற விஷமும் இருக்கக்கூடும். இந்தப் பிரச்னையிலிருந்து தனிமனிதர்களாகவும் சமூகமாகவும் விடுபட உங்களுக்குத் தெம்பு உள்ளது, அதை நம்புங்கள். ஒரு கள்வனின் டார்ச் லைட்டை நம்பி, குறுக்கு வழியில் சென்று பாதாளத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

இந்தப் பொங்கலில் அறுவடை செய்யப்படும் புன்னகைகளும் நம்பிக்கைகளும் நமக்கு ஆண்டாண்டு காலம் உணவளிக்கட்டும். மீண்டும் சந்திப்போம், வணக்கம்.



# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


கல்வி tv CHANNEL

❖ முதலில் இருக்கும் உருவிற்கு ஒத்த உருவைத் தெரிவு செய்க.


01.



02.




03. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்கு உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?




A உரு　　B உரு

1) மூன்றாகும்　2) நான்காகும்　3) நான்கிலும் அதிகமாகும்

04.




கட்டத்தினுள் தரப்பட்டுள்ள உருக்களுடன் சேர்க்கக்கூடிய மிகப் பொருத்தமான உரு எது?



05.




கட்டத்தில் தரப்பட்டுள்ள உருக்களுடன் சேர்க்கக்கூடிய மிகப் பொருத்தமான உரு எது?




❖ பின்வரும் உருக்களில் தரப்பட்டுள்ள இலக்கங்கள் அமைந்துள்ள கோலத்தை அவதானித்து இடைவெளியில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

06.




1) 15
2) 24
3) 17

07.




1) 32　2) 42　3) 18


08. ஒரு கண்காட்சியினைப் பார்வையிடுவதற்கு பார்வையாளர்களுக்குப் பற்றுச் சீட்டுப் புத்தகத்தில் 116ஆம் இலக்கத்திற்கும் 175 ஆம் இலக்கத்திற்கும் இடையில் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன எனின், எத்தனை பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டன?


1) 59　2) 58　3) 60

09. அடுத்துவரும் 7 எண்களின் கூட்டுத்தொகை 28 ஆகும். அங்கு குறிப்பிடப்பட்ட 2 ஆவது எண்ணையும் 4 ஆவது எண்ணையும் கூட்டும்போது கிடைக்கும் விடை யாது?

1) 6　2) 5　3) 8

10. கட்டத்தினுள் உள்ள உருக்களின் வரிசையில் அடுத்ததாக இட வேண்டிய உரு எது?





### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 2 | 03) 3 | 05) 2 | 07) 02 | 09) 1 |
| 02) 1 | 04) 1 | 06) 3 | 08) 02 | 10) 2 |

---

கல்வி tv CHANNEL-1

**10.01.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**10.01.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடல்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடல்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மழை ஓய்ந்த போதிலும் வெள்ளம் வடியவில்லை!

## களுவாஞ்சிக்குடி மக்கள் சிரமம்

களுவாஞ்சிக்குடி, ஜன. 17

**மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வந்த வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை ஓய்ந்தபோதிலும், தற்போது பாடசாலைகள், குடியிருப்பு பகுதி களில் வெள்ளம் இன்னமும் வடியவில்லை. இதனால், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பொதுமக்கள் பலரும் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்ற தெரிவிக்கப்பட்டது.**

இந்த நிலையில், அந்தப் பகு தியில் வெள்ளத்தை வெளியேற் றும் பணிகள் மும்முரமாக ஏற் படுத்தப்பட்டுள்ளன. மண்முனை தென் எருவில் பற்று பிர தேச சபை உறுப்பினர் மே.வினோ ராஜின் நிதிப் பங்களிப்பிலும் இந்தத் திட்டம் முன்னெடுக் கப்படுகின்றது.

குறிப்பாக, பெருவெள்ளம் தேங்கியுள்ளதால் களுவாஞ் சிக்குடி சரஸ்வதி வித்தியலய மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். இதனால், நோய்களும் பரவும் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் நீர் வழிந்தோடுவதற்கு வசதியாக



வீதிகள் அமைக்கப்படாமையே காரணம் என்று தெரிவிக்கப் பட்டது. இதனால், கொங்கிறீட் வீதியில் வாய்க்கால் வெட்டி வெள்ளத்தை வெளியேற்றும் பணிகளும் இடம்பெற்று வரு கின்றன என்று பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (ஐ)



# சுகாதார சேவைகள் பணிப்பாளர் காத்தான்குடிக்கு நேற்று வருகை!

காத்தான்குடி, ஜன. 17

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் அசேலகுணவர்த் தன, காத்தான்குடி ஆதார வைத் தியசாலைக்கு நேற்று ஞாயிறுக் கிழமை வருகை தந்தார்.

இதன்போது, காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மருந் துக் களஞ்சியசாலையை அவர் திறந்து வைத்தார்.

அத்துடன், கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கி, கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாகச் செயல்பட்ட வைத்தியாலை யின் மருத்துவர்கள், தாதியர்கள் ஊழியர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

"ஒமைக்ரான் தொற்றிலிருந் தும் நாம் மக்களைப் பாதுகாக்க வேண்டும். அதற்காகவும் அர்ப் பணிப்புடன் பாடுபட வேண் டும்" என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன இதன்போது தெரிவித்தார்.

காத்தான்குடி ஆதார வைத் தியசாலையின் வைத்திய அத் தியட்சகர் மருத்துவர் எம். எஸ். எம். ஜாபீர் தலைமையில் நடை பெற்ற மேற்படி நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத் துவர் ஏ. ஆர். எம். தௌபீக், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் மருத்துவர் என். மயூரன், காத்தான்குடி ஆதார வைத்திய சாலை மருத்துவர்கள், தாதியர் கள், வைத்தியசாலை அபிவிருத் திக்குழு உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# பொது இடங்களில் தடுப்பூசி அட்டை சோதனை கட்டாயம்!

## கல்முனை சுகாதார சேவைகள் பிரிவு அறிவிப்பு

கல்முனை, ஜன. 17

கல்முனை பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் பொது இடங்களில் கோவிட்19 தடுப்பூசி அட்டை சோதிக்கப்பட்டு வருகின்றது என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் மருத்துவர் ஜீ.சுகுணன் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

சந்தைத் தொகுதிகளில் மற்றும் சன நெருக்கமான பொது இடங்களில் வியாபாரத் தில் ஈடுபடுபவர்கள் தம்வசம் கோவிட்19 தடுப்பூசி அட் டையை வைத்திருத்தல் கட்டாயமானது. இது தொடர் பில் வைத்திய அதிகாரி பிரி வில் சோதனைகள் இடம்பெ றும். எனவே, 20 தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்கள் இதுவரை எவ்விதத் தடுப்பூசி யும் பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது பிரிவிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியால யத்துடன் தொடர்புகொண்டு, அது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை, தற்போது மக்கள் கணிசமாக ஒன்றுகூடு வதாகவும், முகக்கவசம் அணி யாமலும், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறை களை பின்பற்றாமலும் கவன வீனமாக நடந்து கொள்வதை காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறு தொடர்ந்து நடந்து



கொண்டால் எதிர்காலத்தில் பெரும் பாதிப்புக்களை எதிர் கொள்ள வேண்டிய சூழ் நிலை ஏற்படலாம். ஆகவே, இவற்றை கருத்தில் கொண்டு மக்கள் மிக அவதானமாக இருக்க வேண் டும் என்றும் அவர் அறிவுறுத் தினார். (ஐ)

# மட்டு. புதுக்குடியிருப்பு ஆயுள்வேத வைத்தியசாலையின் ஒன்றுகூடல்!

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்பு - புதுக்குடியி ருப்பு சித்த ஆயுள்வேத தள வைத்தியசாலையின் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் தேசிய உற்பத்தித்திறனுக்காக பாடு பட்டு உழைத்த வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுச் சான்றுதழ்கள் வழங் கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வைத்தியசாலையில் இடம் பெற்ற இந்த நிகழ்வு வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திரு மதி ஜே.பாஸ்கரன் தலைமை யில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ. எச்.எம். அன் சார் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுதேச மருத் துவத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் மருத்து வர் திருமதி இ. ஸ்ரீதர் மட்டக் களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என். மயூரன், கல் முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளர் வைத்தியர் எம். ஏ. நபீல் ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்துகொண் டனர்.

இந்த நிகழ்வில், கடந்த ஆண்டு அரச அலுவலகங்களில் வினைத்திறன் மிக்கதான சேவை மதிப்பீடு செய்யும் தேசிய உற் பத்தித்திறன் போட்டியில் முதலாவது தடவையாக புதுக் குடியிருப்பு சித்த ஆயுள்வேத தள வைத்தியசாலை பங்கேற்று விசேட பாராட்டுச் சான்றிதழை பெற்றிருந்தது. இதற்காக உழைத்த வைத்தியர்கள், உத்தி யோகத்தர்கள் மற்றும் ஊழியர் கள் ஆகியோரைப் பாராட்டி சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலை, கலா சார நிகழ்வுகளும் இடம்பெற் றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பொத்துவில் பகுதியில் தாவரவியல் பூங்கா!

அக்கரைப்பற்று, ஜன. 17

பொத்துவில் பிரதேசத்தில் நவீன தரத்திலான தாவரவியல் பொதுப் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக, பாராளுமன்ற உறுப்பி னர் எஸ்.எம்.எம்.முஷாரப், நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரி வித்தார்.

பொத்துவில் 5ஆம் பிரிவு கிராமசேவகர் பிரிவில் தாவ ரவியல் பூங்கா அமைப்பதற் காக 10 ஏக்கர் காணி அடை யாளப் படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச செய லாரால் குறித்த காணி அடை யாளப் படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# ஜப்பான் கரையை தாக்கியது சுனாமி

ரோக்கியோ, ஜன. 17

டொங்காவின் ஆழ்கடலில் பதிவான எரிமலை வெடிப்பினை அடுத்து ஏற்பட்ட சுனாமி ஜப்பானிய கரையோரத்தைத் தாக்கியுள்ளதாக ஜப்பானிய வளிமண்டல நிலையம் அறிவித்துள்ளது.

தென்அமாமி மற்றும் டொக்காரா தீவுகளை அண்டிய பிரதேசங்களில் 3 மீற்றர் வரை கடல் அலைகள் உயர்ந்தமையை அடுத்து நேற்று முன் தினம் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஹொக்கைடோவில் இருந்து ஒக்கினாவோ வரையிலான கரையோர பகுதிகளில் கடல் மட்டம் ஒரு மீற்றருக்கு உயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கரையோர வாழ் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அதிகாரிகள் அறிவித்திருந்தனர்.

ஆழ்கடல் ஏற்பட்ட எரிமலை வெடிப்பின் 5.8 ரிக்டர் அளவில் பதிவானதாக அமெரிக்க புவிச்சரிதவியல் மையம் தெரிவித்துள்ளது.

இதன் தாக்கம் பல நாடுகளில் உணரப்பட்டதாக விஞ்ஞானிகளினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டொங்கோவில் இருந்து 2 ஆயிரத்து 300 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நியூசிலாந்தின் வட கரையோரப் பகுதிகளிலும் இதன் தாக்கம் உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.கரையோரப்பகுதியை விட்டு பலர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இந்தியாவில் மீண்டும் தொற்றுக்கள் உச்சம்!

புதுடில்லி, ஜன. 17

இந்தியாவில் கடந்த 8 மாதங்களுக்கு பின்னர் மிக அதிகளவாக நேற்று 2 இலட்சத்து 71 ஆயிரத்து 202 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அத்துடன், நேற்று காலை வரையான ஒருநாளில் மட்டும் 314 கொரோனா மரணங்களும் பதிவாகியுள்ளது என்று இந்திய மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

புதிய தொற்று நோயாளர்களுடன் இந்தியாவில் உறுதிப்படுத்தப்பட்ட மொத்த கொரோனா தொற்று நோயாளர் தொகை 3 கோடியே 71 இலட்சத்து 22 ஆயிரத்து 614 ஆக அதிகரித்துள்ளது. மொத்த கொரோனா மரணங்களும் 4 இலட்சத்து 86 ஆயிரத்து 66 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் வரையான தரவுகளின் அடிப்படையில் 156 கோடியே 76 இலட்சத்து 15 ஆயிரத்து 454 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. நேற்று ஒரே நாளில் 66 இலட்சத்து 21 ஆயிரத்து 395 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஒமைக்ரோனை கட்டுப்படுத்த கடுமையாகப் போராடும் சீனா!

பீஜிங், ஜன. 17

உலகெங்கும் ஒமைக்ரோன் உருத்திரிவு கொரோனா பரவல் தீவிரமடைந்து கடும் நெருக்கடி உருவாகியுள்ள நிலையில் இதனைக் கட்டுப்படுத்த சீனா கடுமையாகப் போராடி வருகிறது.

புதிய திரிபு நாட்டுக்குள் தீவிரமடையாது கட்டுப்படுத்த கடுமையான கட்டுப்பாடு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சீனா எடுத்துள்ளது.

சீனாவில் கடந்த வெள்ளிக்கிழமை உள்நாட்டில் 104 புதிய கோவிட் தொற்று நோயாளர்கள் பதிவானதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹெனானில் 52, தியான்ஜினில் 39, குவாங்டாங்கில் 08, ஷாங்சியில் 04, மற்றும் ஜெஜியாங்கில் 01 தொற்று நோயாளர்கள் நேற்று முன் தினம் அடையாளம் காணப்பட்டனர் என சீன தேசிய சுகாதார ஆணையகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை விட வெளிநாடுகளில் இருந்து வந்த 61 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதற்கிடையில், தியான்ஜின் நகரத்தை அடுத்து தென் சீனாவின் ஜுஹாய் மாகாணத்திலும் ஒமைக்ரோன் தொற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

தென் சீனாவின் ஜுஹாய் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை 07 பேருக்கு ஒமைக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சீன ஊடகமான குளோபல் டைம்ஸ் தெரிவித்துள்ளது. (அ)

# மரணத்தின் விளிம்பில் ஆப்கானிஸ்தான் மக்கள்!

## உதவுமாறு ஐ. நா. சபை அழைப்பு

நியூயோர்க், ஜன. 17

ஆப்கானிஸ்தான் மக்கள் தற்போதைய சூழ்நிலையில் மரணத்தின் விளிம்பில் உள்ளனர். 87 இலட்சம் ஆப்கானிஸ்தான் மக்கள் பட்டினியால் வாடி வருகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலவரம் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

அமெரிக்க மற்றும் நேட்டோ துருப்புக்கள் விலகலுக்கு பிறகு, தலிபான் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது ஆப்கானிஸ்தானின் உதவி சார்ந்த பொருளாதாரம் ஏற்கனவே தடுமாறிக் கொண்டிருந்தது.

சர்வதேச சமூகம் ஆப்கானிஸ்தானின் வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை முடக்கியது. பொருளாதார ஆதரவை நிறுத்தியது,



தலிபான்களுடன் இணைந்து பணியாற்ற விரும்பவில்லை. பொருளாதாரத்தை காப்பாற்ற பணம் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் இந்த அவசர சூழ்நிலையில் நிறுத்தப்பட வேண்டும்.

உலகின் பெரும்பாலான நிதி அமைப்பு டொலரில் செயல்படுவதால் அமெரிக்காவுக்கு மிக முக்கிய பங்கு உள்ளது. முக்கியமாக அமெரிக்காவில் உள்ள ஆப்கானிய வெளிநாட்டு இருப்புகளில் 700 கோடி டொலர்களை அமெரிக்கா முடக்கியுள்ளது. ஆப்கானிய பொருளாதாரத்தில் பணப்புழக்கத்தை விரைவாக மீட்பது மிகவும் முக்கியமானது.

பசியால் உயிரிழக்கும் ஆப்கானிஸ்தானியர்களை காப்பாற்ற 500 கோடி அமெரிக்க டொலர் நிதி உதவி அந்த நாட்டிற்கு வழங்கப்பட வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் ஆப்கானியர்கள் மரணத்தின் விளிம்பில் உள்ளனர். 87 இலட்சம் ஆப்கானியர்கள் பட்டினியால் வாடி வருகின்றனர். மருத்துவர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், மின் பொறியாளர்கள் மற்றும் பிற அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்க சர்வதேச நிதி அனுமதிக்கப்பட வேண்டும். ஆப்கானிஸ்தான் மக்களுக்கு ஆதரவளிக்குமாறு சர்வதேச சமூகத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறேன் - என்று அவர் கோரியுள்ளார். (ஐ)

## ஒமைக்ரோனுடன் எல்லாம் முடியுமா?

# மேலும் பல புதிய திரிபுகளை உலகம் சந்திக்க நேரலாம் என்று எச்சரிக்கை!

நியூயோர்க், ஜன. 17

ஒமைக்ரோனின் தொடர்ச்சியாக வரக்கூடிய அடுத்த திரிபுகள் லேசானவையாக இருக்கும் என்றோ அவை தடுப்பூசிகளுக்குக் கட்டுப்படும் என்றோ நம்புவதற்கு நம்மிடம் எந்த உத்தரவாதங்களும் இல்லை.மேலும் பல கிரேக்க எழுத்துக்களைத் (Greek letters) தெரிந்து கொள்வதற்குத் தயா ராயிருங்கள்.

-அமெரிக்காவின் முக்கிய தொற்று நோய் மற்றும் வைரஸ் மூலக்கூற்றுத் துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் சிலர் இவ்வாறு புதிய எச்சரிக்கையை விடுத்திருக்கின்றனர்.

கொரோனா வைரஸ் திரிபுகளது ஆகப் பிந்திய வடிவமாகிய ஒமெக்ரோன் திரிபு லேசானது, வீரியம் குறைந்தது என்றும் அதன் வருகை தொற்று நோயின் தீவிரத் தன்மையைத் தணித்து அதனை ஓர் உள்ளூர் சமூக நோயாக மாற்றிவிடும் எனவும் பரவலாக நம்பப்பட்டு வருகின்ற நிலையிலேயே நிபுணர்கள் அதனைத் ‘தப்புக் கணக்கு’ என்று கூறி மறுத்திருக்கின்றனர்.

வைரஸ் ஒரேயொரு நபருக்குத் தொற்றுகின்ற போதுகூட அது பிறழ்வடைகின்றது.அவ்வாறான நிலையிலேயே ஒமெக்ரோன் மிக வேகமாக உலகெங்கும் பரவி வருகிறது.அதற்கு முந்திய திரிபுகள் தொற்றியதன் காரணமாகவும் தடுப்

பூசிகளாலும் மனித உடல்களில் உருவாகிய நோய் எதிர்ப்புச் சக்திக்கு மத்தியிலேயே அது இத்தனை வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது.

ஒமைக்ரோனின் இந்த வேகமான பரவல்அதன் அடுத்த பலவித மாறுதல்களுக்கும் அடுத்தடுத்த புதிய திரிபுகளுக்குமான வாய்ப்புகளை அதிகமாக வழங்குகிறது என்று பொஸ்டன் பல்கலைக் கழகத்தின்

தொற்று நோயியலாளர் லியனார்டோ மார்ட்டினஸ் ஏபி செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

பீடித்தவர்களை விரைவாகக் கொன்று விட்டால் அதன் பிறகு வைரஸ் வேகமாகப் பரவாது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.தடுப்பூசி மூலம் மரணங்களைத் தடுக்க மனிதன் முயற்சிப்பதால் வைரஸ் அதற்கு எதிராகத் தன்னைத் தக்க வைப்பதற்குத் தீவிரமான புதிய வடிவங்களை எடுக்கின்றது.

1918 இல் ஸ்பானியக் காய்ச்சல் தடுப்பு மருந்துகள் எதுவும் அற்ற சூழ்நிலையில் அதன் இஷ்டத்துக்கு முடியுமானவரை மில்லியன் கணக்கானோரைச் சாவடித்தது .மனித உடலில் நோய் எதிர்ப்பு இயற்கையாக உருவாகிப் பலம் பெற்ற பிறகே அது தணிந்தது. ஆனால் இன்று அறிவியல் வளர்ச்சி தடுப்பு மருந்துகள் மூலம் வைரஸின் தொற்றுக்களை முறியடிக் கின்ற ஆயுதமாக மனிதனது கரங்களில் உள்ளன. அதனால் சூரன் தலைமாற்றிப் பிறந்து வந்தது போன்று வைரஸும் தன்னாலான மூர்க்கத் துடன் பல தலைகளை மாற்றி - வேடங்களைத் தாங்கிப் - பிறப்பெடுக்கின்றது.

இந்த அடிப்படையிலேயே பிரான்ஸின் மார்செய் பிராந்தியத்தைச் சேர்ந்த சர்ச்சைக்குரிய அறிவியலாளர் டிடியே ராவுல்ட் (Didier Raoult)தடுப்பூசி தொற்றுக்களை அதிகரிக்கச் செய்கின்றது” என்று ஒரு பரபரப்பான கருத்தை அண்மையில் வெளியிட்டி ருந்தார். அதிகம் தடுப்பூசி ஏற்றிய நாடுகளிலேயே அதிக எண்ணிக் கையானோர் தொற்றுக்கு இலக்காகின்றனர் என்று அவர் கூறுகிறார்.

தொற்று நோய் தொடங்கியது முதல் பிரான்ஸின் இது வரையான மொத்த கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் சுமார் 25 வீத மானவர்கள் கடந்த ஒரு மாத காலத்தில் தொற்றுக்குள்ளாகி இருப்ப தையும் அதே காலப்பகுதியில் நாட் டில் 15 மில்லியன் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டிருப்பதையும் தனது வாதத்துக்கு ஆதாரங்களாக முன்வைக்கிறார் பேராசிரியர் டிடியே ராவுல்ட்

அமெரிக்க மற்றும் உலக சுகாதார நிறுவன நிபுணர்களது கருத்துப்படி உலக நாடுகள் எங்கும் இந்த ஆண்டு 70 சதவீதமானவர்கள் தடுப்பூசி பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டால் மாத்திரமே அடுத்தடுத்த திரிபுகள் தோன்றுவது தடுக்கப்பட முடியும் என்கின்றனர். உலகில் இன்னும் பல டசின் கணக்கான நாடுகள் தங்கள் மக்களில் அரைப் பங்கினருக்குக் கூட ஓர் ஊசியையேனும் வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

அதேசமயம் போதியளவு ஊசிகள் உள்ள அமெரிக்கா போன்ற நாடுகளில் பெரும் எண்ணிக்கையானோர் அதனை எதிர்த்துக்கொண்டு ஏற்றாமல் உள்ளனர்.

இவ்வாறான தடுப்பூசிச் சமநிலை அற்ற உலகில் வைரஸ் திரிபுகள் முடிவுக்கு வர நீண்ட காலம் எடுக்கும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். அவ்வாறு உலகம் தடுப்பூசி மூலம் பூரணமான நோய் எதிர்ப்புச் சக்தி யைப் பெற்றுக்கொண்ட பின்னரும் கூட வைரஸின் ஆபத்தான புது வடி வங்கள் திரும்பி வருவதற்கான வழிகள் திறந்தே இருக்கின்றன. வளர்ப்பு நாய்கள், பூனைகள் மற்றும் மான்கள், பண்ணைகளில் வளருகின்ற மிங் விலங்குகள் போன்றவற்றின் உடலில் திரிபுகள்தங்கவும் அங்கிருந்து பரி ணாமம் பெற்று மீண்டும் மனிதனுக்குத் தாவுவதற்கும் வாய்ப்பு உள்ளது என்பதையும் நிபுணர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நினைவூட்டுகின்றனர். தொற்று நோயின் மத்தியில் நம்மால் மறக்கப்பட்ட ஒரு தரப்பாக இந்த விலங்குகள் உள்ளன என்பதை அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய சவால்கள் நிறைந்த சூழ் நிலையில் ஒமெக்ரோனுடன் எல்லாம் முடிந்துவிடும் என்று துள்ளுவதில் நன்மைகளை விட ஆபத்துகளே அதிகம் என்கின்றனர்.

# கடைசி டெஸ்டிலும் இங்கிலாந்து தோல்வி!

ஹோபார்ட், ஜன. 17

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஷ் டெஸ்டின் கடைசிப் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து இடையிலான ஆஷஷ் கடைசி டெஸ்ட் ஆட்டம் பகல் - இரவு ஆட்டமாக ஹோபர்டில் நடை பெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

முதல் இனிங்சில் அவுஸ்திரேலியா 303 ஓட்டங்களை எடுக்க பதிலுக்கு இங்கிலாந்து 188 ஓட்டங்களை எடுத்தது.

இதையடுத்து, 115 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இனிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலியா மார்க் வூட் வேகத்தில் வீழ்ந்து 155 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதன்மூலம், இங்கிலாந்தின் வெற்றிக்கு 270 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டன. இந்த முறை இங்கிலாந்துக்கு தொடக்கம் நன்றாகவே அமைந்தது. ரொறி பேர்ண்ஸ் மற்றும் ஸாக் கிராவ்லி முதல் விக்கெட்டுக்காக 68 ஓட்டங்களை சேர்த்தனர். 26 ஓட்டங்களை





எடுத்த பேர்ண்ஸ், கேமரூன் க்ரீன் பந்தில் 'போல்ட்' ஆனார். இதன் பிறகு, இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் அடுத்தடுத்து களமிறங்கி வந்த வேகத்தில் ஆட்டமிழந்தனர்.

கிராவ்லி 36 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற துடுப்பாட்ட வீரர்கள் 11 ஓட்டங்களைத் தாண்டவில்லை. இதனால், இங்கிலாந்து அணி 38.5 ஓவர்களில் 124 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் அணித் தலைவர் பட் கம்மின்ஸ், ஸ்கொட் போலந்த், கேமரூன் க்ரீன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், மிற்செல் ஸ்ரார்க் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதன்மூலம், 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா ஆஷஷ் தொடரை 4-0 என்ற கணக்கில் வென்றது. (ஐ)




## டெஸ்ட் தலைமையையும் துறந்தார் விராட் கோலி!

கேப்டவுன், ஜன. 17

இந்தியாவின் வெற்றிகரமான டெஸ்ட் கிரக்கெட் தலைவரான விராட் கோலி தென்னாபிரிக்காவுக்கு எதிரான எதிர்பாராத தொடர் தோல்வியை அடுத்து தலைவர் பதவியில் இருந்து விலகினார்.

கோலி முன்னதாக 2021 இருபது -20 உலகக் கிண்ணத்துக்கு பிறகு இந்திய இருபது -20 அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகினார். பின்னர் ஒருநாள் அணியின் தலைமைப் பொறுப்பும் ரோஹித் சர்மாவிடம் போனது.

தற்போது டெஸ்ட் அணித் தலைவர் பொறுப்பில் இருந்தும் விலகியமை ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே இந்திய கிரிக்கெட் சபைக்கும் விராட் கோலிக்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடு மற்றும் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் தோல்வி ஆகிய காரணங்களே அவரின் விலகலுக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரின் இடையில் எம். எஸ் டோனி விலகியதும், டெஸ்ட் தலைவராக விராட் கோலி நியமிக்கப்பட்டார். அப்போதிருந்து 68 டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவை வழிநடத்தி சாதனை படைத்த அவர், 40 வெற்றிகளையும் 17 தோல்விகளையும் அணிக்கு பெற்றுக் கொடுத்தார்.

இந்திய அணிக்காக அதிக வெற்றிகளை பெற்றுக் கொடுத்த தலைவர் என்ற சாதனையுடன், அதிக டெஸ்ட் ஓட்டங்களை பெற்ற இந்திய அணியின் தலைவர் (5,864) இந்திய அணியின் தலைவராக அதிக சதங்கள் (20), இந்திய அணியின் தலைவராக அதிக இரட்டை சதங்கள் (7)

இந்திய அணியின் தலைவராக அதிக ஓட்ட சராசரி (54.80) என்ற சாதனைகளையும் அவர் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## சிட்னி ஓப்பன் ரென்னிஸ் பட்டம் வென்றார் படோசா

சிட்னி, ஜன. 17

சிட்னி ஓப்பன் ரென்னிஸ் தொடர் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் படோசா பட்டத்தை வென்றார்.

சிட்னியில் பெண்களுக்கான சர்வதேச ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதியில் செக் குடியரசின் கிரெஜிகோவா, ஸ்பெயினின் படோசா மோதினர்.

முதல் செற்றை 6:3 என கைப்பற்றினார் படோசா. அடுத்த செற்றில் எழுச்சி பெற்ற கிரெஜிகோவா, 6:4 என கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை முடிவு செய்ய நடந்த மூன்றாவது செற் 'ரை பிரேக்கர்' வரை சென்றது. இதில் அசத்திய படோசா 7:6 என வசப்படுத்தினார். முடிவில் படோசா, 6:3, 4:6, 7:6 என்ற கணக்கில் போராடி வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். (ஐ)

## இந்தியாவுடனான தொடரை வென்றது தென்னாபிரிக்கா!

கேப்டவுன், ஜன. 17

இந்தியாவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தென்னாபிரிக்கா, இந்தியா இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நடைபெற்றது. முதல் இனிங்ஸில் இந்திய அணி 223 ஓட்டங்களும், தென்னாபிரிக்க அணி 210 ஓட்டங்களும் எடுத்தன.

13 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இனிங்ஸை விளையாடிய இந்தியா 198 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதையடுத்து, 212 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்கா 4ஆம் நாள் உணவு இடைவேளையில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்கள் எடுத்திருந்தது. வான் டேர் டுசென் 22 ஓட்டங்களுடனும், தெம்பா பவுமா 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இடைவேளைக்குப் பிறகு டுசெனும், பவுமாவும் விக்கெட்டை இழக்காமல் வெற்றி இலக்கை அடையச் செய்தனர். 63.3 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 212 ஓட்டங்கள் எடுத்த தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த டுசென் 41 ஓட்டங்களும், பவுமா 32 ஓட்டங்களும் எடுத்தனர். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 2-1 என்ற கணக்கில் வென்றது. (ஐ)






## ஜோகோவிச்சின் வீசா மீண்டும் இரத்தானது

சிட்னி, ஜன. 17

நோவக் ஜோகோவிச்சின் வீசாவை இரண்டாவது முறையாகவும் இரத்து செய்யும் அவுஸ்திரேலிய அரசங்கத்தின் முடிவை பெடரல் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. இதனால் ரென்னிஸ் உலகின் நம்பர் வன் வீரரான நோவக் ஜோகோவிச் விரைவில் அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு கடத்தப்படவுள்ளார். இதனால்,அவர் ஆஸி. ஓப்பனில் பங்கெடுக்கும் வாய்ப்பும் இல்லாமல் போயுள்ளது.

முன்னதாக அவுஸ்திரேலிய ஓப்பன் முதல் சுற்றுப் போட்டிகளுக்கான அட்டவணையில் சேர்பிய வீரர் நோவக் ஜோகோவிச்சும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அந்நியச் செலாவணிக்கான தீர்வே மின்சார விநியோகத்தை சீராக்கும்!

## மின்சக்தி அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, ஜன.17

நாட்டில் தற்போது உச்சம் பெற்றுள்ள அந்நிய செலாவணி பிரச்னைக்கு தீர்வு கண்டவுடன் மின்விநியோக தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணப்படும். எதிர்வரும் 22ஆம் திகதி வரை மின் விநியோகத்தை துண்டிக்காமலிருக்க எதிர்பார்த்துள்ளோம் என மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

டொலர் நெருக்கடி காரணமாக சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திரகரிப்புக்கு தேவையான மசகு எண்ணெயை கொள்வனவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது.

இதன் காரணமாக சப்புக்கஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கடந்த 3 ஆம் திகதி மூடப்பட்டது.

சப்புக்கஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டமையால் மின்நிலையங்களுக்கு தேவையான உராய்வு எண்ணெயை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்ட காரணத்தினால் மின்னுற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல்மின் நிலையமும், நீர்மின் உற்பத்தி நிலையமும் வழமை போன்று செயல்படவுள்ளதால் எதிர்வரும் வாரம் முதல் மின்விநியோகத்தை தடையின்றி வழங்க முடியும். எதிர்வரும் 22ஆம் திகதி வரை மின் விநியோகத்தை துண்டிக்காமலிருக்க எதிர்பார்த்துள்ளோம்.

டொலர் நெருக்கடி காரணமாகவும், மின்பாவனைக்கான கேள்வி அதிகரித்துள்ளதாலும் தேசிய மின்விநியோக கட்டமைப்பில் பாரிய சிக்கல் நிலை தோற்றம் பெற்றுள்ளன.

பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதே பிரதான நோக்கமாக உள்ளது. மின்கட்டமைப்பில் காணப்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல் தனியார் தரப்பிடமிருந்து அவசரமாக மின்சாரத்தை கொள்வனவு செய்வது எமது நோக்கமல்ல - என்றார். (ஐ)

# பயங்கரவாத சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுவீர்கள்!

## புகையிரத திணைக்களத்துக்கு அரசு எச்சரிக்கை

**கொழும்பு, ஜன. 17**

**பொதுப் பயணிகளை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் புகையிரத சேவை திணைக்களத்தினர் இனி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டால் அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புகையிரத தொழில் சங்கத்தினர் இதுவரை காலமும் முன்வைத்த கோரிக்கைகயை நெருக்கடியான சூழ்நிலையில் இயலுமான அளவில் செயல்படுத்தியுள்ளோம். புகையிரத சேவையில் ஈடுப்பட்ட பின்னர் இடைநடுவில் புகையிரதத்தை நிறுத்திவிட்டு பொதுபட பயணிகளை அசௌகரியங்களுக்கு உள்ளாக்குவது முற்றிலும் தவறான செயல்பாடாகும்.

புகையிரத சேவையில் மாதம் 2 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்களே பொதுப் பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் தொழில் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். பொது பயணிகளை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் தொழில் சங்கத்தில் ஈடுப்படும் புகையிரத சேவையாளர்கள் உட்பட ஏனைய சேவை தொழிற்சங்கத்தினர் இனிவரும் காலங்களில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள்.

புகையிரத சேவையில் பல்வேறு சிக்கல் நிலை காணப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். எனினும், சேவையில் நிலவும் பிரச்னைகளுக்கு பேச்சு ஊடாக தீர்வு காண முடியும். பொது பயணிகளை நெருக்கடிக்கு உள்ளாக்கும் பொது போக்குவரத்து சேவையாளர்களுக்கு எதிராக இனிவரும் காலங்களில் கடுமையான நடவடிக்கையை இனி முன்னெடுக்க நேரிடும் - என்றார். (ஐ)

# நாடு பாரிய பின்னடைவை எதிர்கொண்டுவருகின்றது

## வடிவேல் சுரேஸ் எம். பி

கொழும்பு, ஜன.17

நாடு பெரும் சரிவை நோக்கி சென்றுக்கொண்டு இருக்கின்றது. இந்த நிலைமை நீடிக்குமாயின் பாரிய பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்தவவை வருமாறு,

நாட்டு மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள். மக்களால் வாழ்வாதார சுமையை எதிர்கொள்ள முடியவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது.

பால், சீனி இல்லாமல் தேநீர் அருந்துங்கள், அரிசி இல்லாமல் சோறு சாப்பிடுங்கள் என்று இந்த அரசாங்கம் கூறுகின்றது. அத்தியாவசியப் பொருட்களுக்கும் நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எந்தப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் வரிசையில் நிற்க வேண்டிய யுகமே உருவாகியுள்ளது.

ஆசிரியர்கள், வைத்தியர்கள், அரசாங்க ஊழியர்கள் என சகலரும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட தொடங்கியுள்ளனர். இந் நிலைமை தொடர்ந்து நீடிக்குமாயின் நமது நாடு பாரிய தொரு பொருளாதார பின்னடைவை எதிர்நோக்கி செல்லும். எனவே, நம்மை நாமே சுதாகரித்துக்கொண்டு நாட்டை சரியான பாதையில் வழிநடத்தக்கூடிய ஒரு தலைவரிடம் நாட்டை ஒப்படைப்பது சரியான தீர்வாகும் - என்றார்.(கே)

# உழவர் விழாவும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜன. 17

தேசிய கலை இலக்கியப் பேரவையின் உழவர் விழாவும் தாயகம் சஞ்சிகையின் பாரதி நினைவு நூற்றாண்டுச் சிறப்பிதழ் வெளியீடும் இன்று திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான எழுத்தாளர் க. தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தநிகழ்வில் ”தமிழர் பாரம்பரிய உணவுப் பண்பாடு” என்ற தலைப்பிலான விசேட உரையை ஆசிரியர் கைலைநாதன் துசியந்தன் ஆற்றவுள்ளார்.

தாயகம் சஞ்சிகையின் பாரதி நினைவு நூற்றாண்டுச் சிறப்பிதழுக்கான அறிமுக உரையைக் கலாசார உத்தியோகத்தர் தனிநாயகம் அமலதாஸ் ஆற்றுவார்.

மேலும், செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் விசேட கலை நிகழ்வுகளு டன், இளம் பேச்சாளர்கள் கலந்து சிறப்பிக்கும் ‘பாரதி பாடல்களில் அதிகம் விஞ்சி நிற்பது அழகியல் உணர்வே! கொள்கைப் பற்றே!’ என்ற தலைப்பிலான விவாத அரங்கும் இடம்பெறவுள்ளன.

ஆசிரியர் த.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விவாத அரங்கில் மாதவி உமாசுதசர்மா, கார்த்திகாஜினி இராஜேஸ்கண்ணா, சந்திரகுமார் அமலஅசாம், வ. றொபின்சன் ஆகியோர் விவாதம் செய்வர். (ஐ)

# எரிவாயுத் தட்டுப்பாடு; நிவர்த்திசெய்யப்பட்டது!

## லிற்றோ எரிவாயு நிறுவனம்

கொழும்பு, ஜன. 17

நீண்டநாட்களாக நிலவி வந்த எரிவாயு சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக லிற்றோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் தற்போது விநியோகத்திற்கு தேவையான எரிவாயு சிலிண்டர்கள் உள்ளன. இதன் காரணமாக மக்கள் வரிசைகளில் காத்திருக்கத் தேவையில்லை.

இதேவேளை, சிறிய அளவிலான வர்த்தக நிலையங்களுக்கும் அடுத்த வாரத்தில் இருந்து தட்டுப்பாடின்றி எரிவாயு விநியோகிக்கப்படும் என்று நிறுவனம் அறிவித்திருக்கின்றது. கடந்த காலங்களில் நாளாந்த எரிவாயு சிலிண்டர்களுக்கான கேள்வி சுமார் இரண்டு இலட்சமாகக் காணப்பட்டது.

எனினும், தற்போது அந்த எண்ணிக்கை 90 ஆயிரமாக காணப்படுகின்றது. இதன்படி, நிறுவனம் தற்போது நாளாந்தம் 90 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கின்றது.

எனினும், இரண்டரைக் கிலோ எடைகொண்ட எரிவாயு சிலிண்டர்களைப் பகிர்ந்தளிப்பதில் சிறு தாமதம் நிலவுகின்றது என்று லிற்றோ எரிவாயு நிறுவனம் அறிவித்திருக்கின்றது. (ஐ)

# கருத்தரங்குகளுக்கு தடை விதிக்கப்படும்!

கொழும்பு, ஜன.17

2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான கல்வி வகுப்புகள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு தடை விதிக்க இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான கல்வி வகுப்புகள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்களுக்கு ஜனவரி 18 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் உயர்தரப்பரீட்சை தொடர்பான கல்வி வகுப்புகள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு பெப்ர வரி முதலாம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மாலைதீவின் சபாநாயகர் நேற்று இலங்கை வந்தார்!

கொழும்பு, ஜன. 17

மாலைத்தீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் நான்கு நாள் உத்தியோக பூர்வ பயணமாக இலங்கை வந்துள்ளார்.

நஷீத்துடன் இரண்டு பேர் கொண்ட தூதுக்குழுவும் நாட்டுக்கு வருகை தந்ததாக விமான நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர். ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானத்தில் வருகை தந்த தூதுக் குழுவினர் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கினர்.இந்தக் குழுவினர் எதிர்வரும் புதன்கிழமை நாட்டை விட்டுச் செல்லவுள்ளனர். (ஐ)

# களுகங்கையில் மூழ்கி இரு நபர்கள் உயிரிழப்பு

## சிறுவன் ஒருவன் மாயம்

கொழும்பு, ஜன.17

களுகங்கையில் நீராட சென்ற மூவரில் இருவர் நீரில் மூழ்கி மரணமாகினர். அத்துடன், 10 வயது சிறுவன் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்தினபுரி - அகுராவ தொட்டை பிரதேசத்தை சேர்ந்த 22, 40 வயதுடைய இருவரே இவ்வாறு நீரில் மூழ்கி மரணமடைந்தனர்.

குறித்த பிரதேசத்தில், நேற்று முன்தினம் மாலை நால்வர் நீராடிக்கொண்டிருந்த நிலையில் நீரில் அடித்துச் செல்லப் பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் மீட்கப்பட்டார். மற்றைய மூவரும் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தனர்.

இவர்களில் இருவரின் உடல்கள் நேற்று மீட்கப்பட்டன. நீரில் மூழ்கிய சிறுவன் கிடைக்கவில்லை. கடற்படையினர், பொலிஸார் இணைந்து சிறுவனைத் தேடி வருகின்றனர். (கே)

## இலங்கைக்கு...

வின் பெரியளவிலான உதவித் திட்டத்தை இறுதி செய்தனர். கடந்த 15ஆம் திகதியன்று வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சு. ஜெய்சங்கர், இலங்கையின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்‌ஷவுடன் ஒரு மெய்நிகர் சந்திப்பை நடத்தினார். கடந்த மாதம் ராஜபக்‌ஷவின் இந்தியப் பயணத்தைத் தொடர்ந்து இந்த உரையாடல் நடைபெற்றது.

இதன்படி, இலங்கையிலும், இந்தியாவிலும் ஜனவரி 15ஆம் திகதி தைப்பொங்கல் கொண்டாடப்பட்டு வரும் நிலையில், இரு தரப்பும் பரஸ்பரம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்., கலாநிதி ஜெய்சங்கர், இந்தியா எப்பொழுதும் இலங்கையுடன் நிற்கிறது என்றும், கோவிட்-19 தொற்றுநோயால் முன்வைக்கப்படும் பொருளாதார மற்றும் பிற சவால்களை சமாளிப்பதற்கு இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்தார். நெருங்கிய நண்பர்கள் மற்றும் கடல்சார் அண்டை நாடுகளாக, இந்தியாவும் இலங்கையும் நெருங்கிய பொருளாதார தொடர்புகளால் ஆதாயமடைகின்றன.

சார்க் நாணய மாற்று ஏற்பாட்டின் கீழ் இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நீடிக்கப்படுவதை இரு அமைச்சர்களும் சாதகமாக குறிப்பிட்டனர். இரண்டு மாதங்களுக்குள் 515.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தீர்வு வழங்கப்படுவது இலங்கைக்கு உதவும், உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு 100 கோடி அமெரிக்க டொலர்கள் மற்றும் இந்தியாவில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 50 கோடி டொலர்கள் இந்தியக் கடன் வசதியை விரிவுபடுத்துவதற்கான முன்னேற்றத்தை இரு அமைச்சர்களும் ஆய்வு செய்தனர், இலங்கையுடன் இந்தியாவின் நீண்டகால ஒத்துழைப்பை பஸில் ராஜபக்‌ஷ நினைவு கூர்ந்து, ஆதரவு நடவடிக்கைகளை ஆழ்ந்து பாராட்டினார். துறைமுகங்கள், உள்கட்டமைப்பு, எரிசக்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்சாரம் மற்றும் உற்பத்தி உள்ளிட்ட பல முக்கியத் துறைகளில் இலங்கையில் இந்திய முதலீடுகளை வரவேற்றுள்ள அவர், அத்தகைய முதலீடுகளை ஊக்குவிக்க உகந்த சூழல் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார். இந்த நிலையில், திருகோணமலை எண்ணெய் தாங்கி பண்ணைகளை கூட்டாக நவீனமயமாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் அண்மையில் எடுத்த நடவடிக்கைகள் இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதுடன் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும் என இரு அமைச்சர்களும் குறிப்பிட்டனர்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை, மனிதாபிமான அடிப்படையில் விரைவில் விடுதலை செய்வதை உறுதி செய்யுமாறு இலங்கை அரசை ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்., பகிரப்பட்ட முன்னேற்றம் மற்றும் செழுமைக்கான நீண்டகால பொருளாதார கூட்டாண்மையை நோக்கி பரஸ்பர நன்மை பயக்கும் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வழிநடத்துவதற்கு நெருக்கமான தொடர்பில் இருப்பதற்கு இரு அமைச்சர்களும் ஒப்புக் கொண்டனர்.

## சந்திரிகாவை...

பதிவு செய்யப்பட்டுள்ள புதிய அரசியல் கட்சியான புதிய லங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்தி பரந்து பட்ட கூட்டணி ஒன்றை அமைக்கும் வகையில் செயல்படவுள்ளது.

இது தொடர்பில் குமார வெல்கம கூறுகையில், “எமது கட்சியின் தலைமைக் காரியாலயத்தை எதிர்வரும் மார்ச் ஐந்தாம் திகதி பத்தரமுல்லையில் திறப்பதற்கு தீர்மானித்துள்ளோம். குறித்த நிகழ்வில் எமது கட்சியை மையப்படுத்திய பரந்து பட்ட அணியொன்றை ஸ்தாபிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

ஜனநாயகம், மனிதாபிமான பண்புகள் நிறைந்த அரசியல் கலாசாரம் ஒன்றையும் அனைவரும் சமத்துவமாக வாழும் அமைதியான சூழல் ஒன்றையும் கட்டியெழுப்புவதற்கு சமூகத்தை வழிநடத்தக்கூடிய அரசியல் கட்சியொன்று அவசியமாகின்றது. அந்த வெற்றிடத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காகவே இப்புதிய அரசியல் கட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

இந்தக் கட்சியின் போசகராகவும் எம்மை வழிநடத்துபவராகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க செயல்படவுள்ளார். அத்துடன், அவருடைய வழிகாட்டலில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கி நகரவுள்ளோம். இந்த நிகழ்விற்கு அனைத்து தலைவர்களையும் அழைப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

மேலும், எமது கொள்கைகளையும், இலக்குகளையும் ஏற்றுக்கொள்பவர்கள் எம்முடன் இணைந்து பயணிப்பதற்கு முடியும். அவ்விதமானவர்களுக்காக எமது கதவுகள் திறந்தே இருக்கும். அண்மையில் சுசில் பிரேமஜயந்தவுடனும் பேச்சு மேற்கொண்டுள்ளேன். அதேநேரம், ஏனைய தலைவர்களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதில் எமக்கு தயக்கங்கள் இல்லை - என்றார். (ஐ)

## நாமல் எப்படி...

கட்சி உட்பட ஏனைய பங்காளி கட்சிகளை அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ குறிப்பிடவில்லை.

எதிர்காலத்தில் ஜனாதிபதி அல்லது பிரதமராக விரும்பும் அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ சுதந்திர கட்சி தொடர்பில் ஊடகங்களில் குறிப்பிட்ட கருத்து அவதானத்திற்குரியது. அரசாங்கத்தில் இருக்க விரும்பம் இல்லாதுவிடின் வெளியேறுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் கூட்டணி கட்சியாக ஒன்றிணைந்துள்ள காரணத்தால் அரசாங்கத்தின் சகல செயல்பாடுகளும், தீர்மானங்களும் சரி என ஏற்க முடியாது. சுதந்திரக் கட்சியின் 15 இலட்ச வாக்குகள் பொது ஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்ததால் தான் ஜனாதிபதி தேர்தலில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. எவரும் தனித்து வெற்றிப் பெறவில்லை. அமைச்சு பதவி வகிப்பவர்கள் அனைவரும் சுதந்திர கட்சிக்கு கடன்பட்டுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற சிறீலங்கா சுதந்திர கட்சியின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## மயிலத்தமடு...

என்று பண்ணையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வெளி மாவட்டங்களை சேர்ந்த சிங்களப் பெரும்பான்மையினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

மாதவனை மேய்ச்சல் தரையில் கடந்த ஆண்டு நூற்றுக்காணக்கான ஏக்கர் காணிகளை வேறு பகுதிகளை சேர்ந்த சிங்களவர்கள் ஆக்கிரமித்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டமை தொடர்பில் கொழும்பு உச்ச நீதிமன்றில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் வாதாடி வருகின்றார்.

இந்த வழக்கு விசாரணையின்போது அங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருப்பவர்கள் அங்கிருந்து செல்வதற்கு உடன்பட்டிருந்த நிலையில் அந்தப் பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்கள் வெளியேறிச்சென்றிருந்தனர்.

இதைத் தொடர்ந்து குறித்த மேய்ச்சல் தரையை பண்ணையாளர்களுக்கு உரியதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிலையில், மீண்டும் மயிலத்தமடு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று பண்ணையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ)

## இந்திய...

கடந்த ஆண்டு டிசெம்பர் 12 ஆம் திகதி பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது. அரசமைப்பு சட்டத்தின்படி ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையுடன் (சிம்மாசன உரை) பாராளுமன்றம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதன்படி, நாளை பாராளுமன்றம் ஆரம்பமாகும்போது ஜனாதிபதியின் உரை இடம்பெறும். இதில்,

13ஆவது திருத்தம் குறித்து கவனம் செலுத்தப்படும் என்றும் இந்த சட்டத்தின் உருவாக்கத்துக்குக் காரணமாக இருந்த இந்தியாவின் ஆசிர்வாதம் பெறப்படும் என்றும் ஜனாதிபதி யின் உரையில் தெரிவிக்கப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன என்று கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில இதழான சன்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக இந்தியா ஏற்கனவே உதவி திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இந்த உதவிகளை வழங்கும்போது, தமிழ்நாட்டில் எழும் விமர்சனங்களை தவிர்க்கக்கூடிய சாதகமான நிலைகள் குறித்து புதுடில்லி ஆராய்கிறது.

ஏனெனில், மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சிக்கு தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு சட்ட மன்றத் தேர்தலில் 4 ஆசனங்கள் கிடைத்தன. ஈழத் தமிழர்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பது அந்தக் கட்சியின் நிலையை தமிழ்நாட்டில் மேலும் வலுப்படுத்தும் என்று மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி நம்புகிறது.

வடக்கு - கிழக்கு தமிழ் கட்சிகள் பொதுவான நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும் - 13ஐ ஆரம்பப் புள்ளியாகக் கருதலாம் என்று கோரிக்கை முன்வைக்குமாறு புதுடில்லி தமிழ்க் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருப்பதற்கும் இதுவே காரணம் என்று கூறப்படுகின்றது.

இத்தகவல்களை அரச உயர்மட்டத்தை மேற்கோள்காட்டி சண்டே டைம்ஸ் தெரிவித்துள்ளது. (ஐ)

## மார்ச்சில்...

என அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட விடயம் குறித்து வெளிப்படையாக பேசாமல் அரசாங்கத்திற்குள் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் உள்ளக கலந்துரையாடல்களின் போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் வெளிப்படையாக கருத்து தெரிவிப்பதற்கு தயார் எனவும் கூறியுள்ளார்.

மார்ச் மாதத்தில் நெருக்கடிகள் தீவிரமடையும் அந்த நெருக்கடிகள் நாட்டின் அரசியல் செல்லும் திசையை தீர்மானிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சுதந்திரக் கட்சி...

அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றுவது சிறந்ததாக அமையும் என அரசாங்கத்தில் உரிய தரப்பினருக்கு தொடர்ந்து வலியுறுத்தியுள்ளேன்”, என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சிறீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன 2014 ஆம் ஆண்டு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுடன் ஒரு மேசையில் அமர்ந்து அப்பம் சாப்பிட்டு அடுத்த நாள் காலையில் ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதை எவரும் மறக்கவில்லை.

சூழ்ச்சிகளுக்கு மத்தியில் தோற்றம் பெற்ற தேசிய அரசாங்கத்தை சிறந்த முறையில் சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்து செல்லவில்லை. 2019ஆம் ஆண்டு சுதந்திர கட்சி பொது ஜன பெரமுனவுடன் கூட்டணி அரசாங் கத்தில் ஒன்றிணைந்த போதிலும் அவர் களின் செயல்பாடு குறித்து எந்நிலையி லும் அவதானத்துடன் செயல்படுகிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சுதந்திர கட்சியை ஒன்றிணைக்கும் ஒப்பந்தத்தை சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது செயல்படுத்துகிறார். 2014ஆம் ஆண்டு அப்பம் சாப்பிட்ட கதையின் இரண்டாம் பாகத்தை மீண்டும் அரங்கேற்ற இடமளிக்கக்கூடாது. சுதந்திர கட்சியினர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு முன்னர் அவர்களை வெளியேற்றுவது அரசாங்கத்திற்கு பாதுகாப்பானதாக அமையும் - என்றார். (ஐ)

## கூட்டமைப்புடன்...

சமூகத்தைத் திருதிப்படுத்தும் வகையிலும், தமிழ் மக் களின் மனதை வெல்லும் வகையிலும் கூட்டமைப்புடன் பேச்சுக்கான வியூகத்தை ஜனாதிபதி வகுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்‌ஷ, ஜனாதிபதியாகப் பதவியேற்று இரு வருடங்கள் கடந்துள்ள போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இதுவரை உத்தியோகபூர்வ சந்திப்பு எதையும் நடத்தவில்லை. கடந்த வருடம் ஜனாதிபதி செயலகத்தால் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அது இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், புதிய வருடத்தில் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் .

இந்த மாத இறுதி வாரத்தில் இந்தப் பேச்சு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## கொரோனாவுக்கு...

ணிக்கை 15,211 ஆக பதிவாகியுள்ளன என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## பொலிஸார்...

சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அறிய வருகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரணவாய் வடக்கு, கொற்றவத்தையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குலசேகரம் மிதுலன் (வயது 24), அப்புக்குட்டி வசந்தன் (வயது- 40) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

குடும்பப் பிரச்னை ஒன்று தொடர்பில் அந்தப் பகுதிக்கு சென்ற பொலிஸாரே இவர்களை கண்மூடித்தனமாகத் தாக்கினர் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்துடன், அப்புக்குட்டி வசந்தன் என்பவரை காயமடைந்த நிலையிலேயே கைது செய்து கொண்டு சென்று தடுப்புக் காவலில் வைத்திருந்தனர் என்றும் அவர்கள் கூறினர். இந்த விடயம் குறித்து யாழ். மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு காய மடைந்தவரின் உறவினர்கள் கொண்டு சென்றதைத் தொடர்ந்து அவரை மருத் துவமனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சேர்ப்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-2)

## சுதந்திரக்...

உள்ளது. இதன்போது, சுதந்திரக் கட்சியினர் வெளியேறுவர் என்று கூறப்படுகின்றது. இந்தத் தகவலை உறுதிப்படுத்துவதற்காக ரோகண லக்‌ஷ்மன் பியதாஸவை தொடர்பு கொண்டேபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஶ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் பொது ஜன பெரமுனவிற்கும் இடையிலான ஒப்பந்தம் நேற்று முற்றுமுழுவதுமாக மீறப்பட்டுள்ளது. எனவே, பொறுமையிழந்த நிலையில் உள்ளோம் என்று தெரிவித்தார்.

இந்நிலையில் ஆளும் கூட்டணியிலிருந்து சுதந்திர கட்சி விலகும் தீர்மானம் எடுக்கப்பட்டால் சுதந்திர கட்சியின் 14 உறுப்பினர்கள் மாத்திரம் அரசாங்கத்தை விட்டு வெளியேறப்போவதில்லை. மாறாக, சுமார் 16 பேர் வரை சுதந்திர கட்சியுடன் இணைந்து வெளியேறுவார்கள் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நான்கு மணிநேர மின்வெட்டு நாட்டில் நடைமுறையாகும்!

## மின்சார சபை எச்சரிக்கை

**கொழும்பு, ஜன. 17**

**நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்து வருவதால் பாரிய மின்வெட்டை அமுல் செய்ய வேண்டி ஏற்படும் என என இலங்கை மின்சார சபை பொறியிய லாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

எனவே, நாளாந்தம் நான்கு மணித்தியாலங்கள் மின் வெட்டுக்கு தயாராக இருக்குமாறு மக்களை கேட்டுக் கொள்வதாக என்று அந்த சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு நேற்று தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையிடம் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு போதுமான 3,000 மெற்றிக் தொன் டீசல் மட்டுமே தற்போது கையிருப்பில் உள்ளது என வும் அவர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் மூன்று நாட்களுக்குப் பின்னர் மின் நுகர்வைக் கட்டுப்படுத்த மின் வெட்டை அமுல் செய்ய வேண்டி ஏற்படும். நீர்த்தேக்கங்களில் தற்போதுள்ள தண் ணீர் முன்னுரிமை அடிப்படையில் விவசாயம், குடிதண் ணீர் மற்றும் சுற்றுச்சூழல் நோக்கங்களுக்காக பயன்படுத் தப்படுவதால் நீர் மின் உற்பத்தியும் குறைந்துள்ளது.

ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட மின் உற்பத்தி நிலை யங்களை நிர்மாணிப்பதில் ஏற்படும் தாமதம் மற்றும் புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் இரத்துச் செய்யப்படு தல் போன்ற காரணிகளால் மின்தடை ஏற்படும் பட்சத் தில் மின்சாரத்தை வழங்கக்கூடிய மாற்று வழிகள் நாட் டில் இல்லை - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# வாள்வெட்டில் இளைஞன் காயம்!

வடமராட்சி, ஜன. 17

வடமராட்சியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை துன்னாலையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் வின்சன் (வயது- 23) என்ற இளைஞரே தலை யில் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (ஐ - 2)

# மலையக மக்களுக்கு பக்கபலமாக இந்தியா எப்போதுமே இருக்கும்!

## தூதுவர் கோபால் பாக்லே தெரிவிப்பு




கொழும்பு, ஜன. 17

மலையக மக்களை பாதுகாத்து அவர் களின் பக்கபலமாக இந்தியா எப்போ தும் இருக்கும் என இலங்கைக்கான இந் திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித் துள்ளார்.

மலையக பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளுடன் தொழிலாளர் தேசிய சங் கத்தின் ஏற்பாட்டில், நேற்று நுவரெ லியா சினிசிட்டா மைதானத்தில் ஆண் டுக்கான தைப்பொங்கல் விழா வெகுவி மர்சையாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வரு மாறு:

மலையக மக்களுக்கும் இந்தி யாவுக்கும் இடையிலான உறவு வரலாற்று முக்கியதுவமிக்கது. கடந்த 2017 ஆம் ஆண்டு இந்திய பிரதமர் நோர் வூட் மைதானத் திற்கு வந்தது வரலாற்று முக்கிய துவமிக்கது. அன்று பிரதமர் மோடிக்கு நீங்கள் கொடுத்த அன்பு, பாசம் என்பவை முக்கியமானவை. அதற்கு இந்தியா எப்போதும் நன்றியுடன் இருக்கும். தாய் தன் பிள்ளையை ஒரு போதும் மறப்பதில்லை அல்லவா? அதே போன்றுதான் தாய் இந்தியா தனது பிள்ளைகளை ஒரு போதும் மறக்காது.

மலையக அபிவிருத்திக்காக தொடர்ந்தும் இந்தியா அதிக சிரத்தையுடன் செயற்பட்டு வருகின்றது. முக்கியமாக நான்காவது கட்டத்தில் பத்தாயிரம் வீட்டுத்திட்டத்தை மலையகத்தில் ஆரம்பிக்கவுள்ளோம். மலையகத்தின் கல்விதுறையிலும் இந்தியா அக்கறையும் செயற்படுகின்றது. மலையக மாணவர்களுக் கான புல மைப்பரிசில் திட்டத்தை இந்தியா வழங்குகின்றமை இதன் ஒரு பகுதி யாகும். இதன் மூலம் சிறந்த நன்மை களை பெற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின் றேன். உறவின் உன்ன தத்தை கூறும் தைப் பொங்கல் விழாவுக்கு என்னை அழைத்தமைக்கு நன்றி-என்றார்.




# ஒமைக்ரோன் திரிபால் பேரழிவு நோக்கி நாடு!

## சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 17

ஒமைக்ரோன் மாறுபாடு நாட்டில் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் விகாரமாக மாறியுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தொற்று வீதத்தை கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்திற்கோ அல்லது சுகாதார அதிகாரிகளுக்கோ அக்கறை இல்லை என்று சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

பொது மக்கள் சுகாதார விதிமுறை களை புறக்கணிப்பதனால் நிலைமை மோசமடைந்துள்ளதாகவும், தொற்று நோய் கடந்துவிட்டது என்ற அனுமா னத்தின் கீழ் பூஸ்டர் டோஸினை பெறுவதற்கான உத்தரவுகளை மக்கள் புறக்கணித்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதிகாரிகளினால் உறுதிபடுத்தப்பட் டதை விட ஒமைக்ரோன் தொற்றாளர் களின் எண்ணிக்கை அதிகமாக இருப்ப தாகவும், ஒமைக்ரோன் மாறுபாட்டால் நாடு பெரும் பேரழிவை நோக்கிச் செல்வ தாக அவர் எச்சரித்தார்.

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் 13 மாணவர்களுக்கு தொற்று!

திருகோணமலை, ஜன. 17

கிழக்கு பல்கலைக்கழ கத்தின் திருகோணமலை வளாக மாணவர்கள் 13 பேருக்கு கோவிட்தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது.

காய்ச்சல், இருமல் காரணமாக நேற்று முன் தினம் இரவு திருகோண மலை பொது வைத்திய சாலையில் இவர்கள் சேர்க்கப்பட்டபோது, அன்ரிஜென் பரிசோத னையின் மூலம் தொற்று உறுதி செய்யப்பட்ட தாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரி வித்துள்ளார்.

தொற்றுறுதியான மாணவர்கள் அனைவரும் பொது மருத்துவமனை யில் தனியான சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட் டுள்ளனர். அத்துடன், ஏற்கனவே வளாகத்தில் சில மாணவர்களுக்கு கோவிட் தொற்று பரிசோதனை செய்யப் பட்டு தனிமைப்படுத்தப்



பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

மேலும், மீண்டும் திருகோண மலையில் தொற்று பரவி வருவதால் கடுமையாக சுகாதார வழிமுறைகளை பின் பற்றுமாறும் சுகாதாரத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# தந்தை, மகன் விபத்தில் பலி!

அக்கரைப்பற்று, ஜன. 17

அம்பாறையில் நேற்று மாலை இடம்பெற்ற விபத் தில் தந்தையும் மகனும் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

தமனை, எக்கல் ஓயா பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்திலேயே இவர்கள் இருவரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்த குழந்தை ஒன்றரை மாத ஆண் குழந்தை என்று தெரிய வருகின்றது. எனினும், இந்த விபத்துக் குறித்து மேலதிக விவரங்கள் உட னடியாகத் தெரியவர வில்லை. (ஐ)

# 3 பிரதேச செயலர்களுக்கு வடக்கில் இடமாற்றம்!

யாழ்ப்பாணம், ஜன. 17

வடக்கில் மூன்று பிரதேச செயலாளர்களுக்கு இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலா ளராக கடமையாற்றிவந்த எஸ். கிருஷ்னேந்திரன் பச் சிலைப்பள்ளி பிரதேச செயலாளராகவும், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த பரமோதயன் ஜெயராணி முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராகவும், ஒட்டுசுட் டான் பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த ரி. அகி லன் பூநகரி பிரதேச செலாளராகவும் இடமாற்றப்பட் டுள்ளனர்.

இந்த இடமாற்றம் கடந்த வருடம் அறிவிக்கப்பட் டிருந்த போதிலும் நடைமுறையாகாத நிலையில் தற் போது மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த பிரதேச செயலாளர்கள் புதிய பிரதேச செயலகங் களில் நாளை மறுதினம் புதன்கிழமை கடமை பொறுப் புக்களை ஏற்பர். (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 17.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - ராவணன், ரஜனி முருகன்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா



7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம்
(திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை)
மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
மறு ஒளிபரப்பு

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு